உதயன்

விலை ரூபா 7.00

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2034 பங்குனி 28 வெள்ளிக்கிழமை (11-04-2003)UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:136

# பக்தாத்தில் நேற்றுப் பகல் தற்கொலைத் தாக்குதல்!

## அமெரிக்கப் படையினர் உயிரிழப்பு

பக்தாத்,ஏப்.11

கூட்டுப்படையினரின் கட்டுப்பாட்டுக்குள் வந்துவிட்டதாகக் கூறப்படும் பக்தாத்தில் நேற்று இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதலில் அமெரிக்கப் படையினரில் சிலர் கொல்லப்பட்டனர்; பலர் காயமடைந்தனர்.

போர்ச் செய்திகளைச் சேகரிக்கும் வெளிநாட்டு ஊடகவியலாளர்கள் தங்கியுள்ள பாலஸ்தீன ஹோட்டலின் வடக்குப் பகுதியிலுள்ள அமெரிக்கா தலைமையிலான கூட்டுப்படையினரின் சோதனைச் சாவடி ஒன்றிலேயே இத்தற்கொலைத் தாக்குதல் நேற்றுப் பகல் இடம்பெற்றதாக அமெரிக்க 'மரைன்' படைப்பிரிவுப் பேச்சாளர் மேஜர் ஹரட் பக்கர் தெரிவித்தார்.

சதாமின் ஆட்சி அகற்றப்பட்டதை அடுத்து பக்தாத்திலுள்ள 'ஷியா' பிரிவு முஸ்லிம் மக்கள் பலர் அமெரிக்கப் படைகளை வரவேற்றுக்கொண்டிருந்தனர். அவர்களில் பலர் கூட்டுப்படை வீரர்களின் அருகே வந்து கை குலுக்கினர். (14 ஆம் பக்கம் பார்க்க)

### 12 ஆண்டுகளின் பின் நாடு திரும்பிய

# 'ஷியா' பிரிவு மதத்தலைவர் நஜாப் நகரில் படுகொலை!



பக்தாத்,ஏப்.11

ஈராக்கின் 'ஷியா' பிரிவு முஸ்லிம்களின் புனித நகரான நஜாப்பில் உள்ள மசூதி ஒன்றில் வைத்து 'ஷியா' மதத்தலைவர் அப்துல் மஜீத் அல்கொய் படுகொலை செய்யப்பட்டார். நஜாப நகரில் உள்ள புனிதத்தலமான இமாம் அலி மசூதியில் இக்கொலைச் சம்பவம் நேற்று இடம்பெற்றது.

சதாமின் எதிரணியைச் சேர்ந்த அல்கொய் 12 ஆண்டுகளுக்கு முன்னர் பிரிட்டனில் தஞ்சமடைந்தார். இதுவரை காலமும் அவர் லண்டனில் தங்கியிருந்தார். ஈராக் மீது போர் தொடுத்த கூட்டுப்படையினர் நஜாப் நகரை கட்டப்பாட்டுக்குள் கொண்டு வந்த பின்னர் லண்டனிலிருந்து கடந்தவாரம்தான் அல்கொய் (14 ஆம் பக்கம் பார்க்க)

### முஸ்லிம் காங்கிரஸ் எம்.பி. - அஷ்ரப் காங்கிரஸ் அமைச்சர்

# இரு தலைவர்களின் போட்டியால் புத்தளம் நகரில் பெரும் குழப்பம்!

## பொலீஸ் துப்பாக்கிச் சூடு; அமைச்சர் ஜயலத் காயம்!

புத்தளம்,ஏப்ரல்11

**முஸ்லிம் காங்கிரஸ் எம்.பி. ரிசாத் பதியுதீனுக்கும் அஷ்ரப் காங்கிரஸ் அமைச்சர் நூர்தீனுக்கும் இடையில் ஏற்பட்ட போட்டியால் புத்தளம் நகரில் நேற்றுப் பெரும் குழப்பம் ஏற்பட்டது.**

**இரு தலைவர்களினதும் ஆதரவாளர்களிடையே ஏற்பட்ட மோதலை அடுத்து பொலீஸார் வான் நோக்கிச் சுட்டனர். கண்ணீர்ப்புகைக் குண்டுகளையும் பிரயோகித்தனர். கூடியிருந்தவர்கள் சிதறி ஓடியபோது அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தன அவர்களுக்கு இடையில் அகப்பட்டு நிலத்தில் விழ்ந்தார். உரசல் காயத்துடன் அவர் தப்பினார்.**

நிலைமையைக் கட்டுப்படுத்து வதற்கு இராணுவத்தினரும் அழைக் கப்பட்டனர். இரு தலைவர்களினதும் ஆதரவாளர்கள் கலைந்து சென்ற பின ரும் வெகுநேரமாகப் பதற்றம் நில வியது.

வடக்கிலிருந்து இடம்பெயர்ந்து புத்தளம் பகுதியில் வதியும் மக்கள் நிவாரணப் பொருள்களைப் பெறுவ தில் அனுபவித்து வந்த சிரமங்களைப் போக்குவதற்காக நடமாடும் சேவை (14 ஆம் பக்கம் பார்க்க)

### கிளிநொச்சியில் நேற்று

## சர்வதேச வங்கிகளின் பிரதிநிதிகள் தமிழ்ச்செல்வனைச் சந்தித்தனர்

கிளிநொச்சி,ஏப்.11

ஜப்பான் தலைநகர் ரோக்கியோ வில் இடம்பெறவுள்ள இலங்கைக்கு உதவிவழங்கும் நாடுகளின் மாநாட்டில வடக்கு - கிழக்கில் அபிவிருத்தி, புனர் வாழ்வு தொடர்பாக தனியான திட்டம் சமர்ப்பிக்கப்படவிருக்கின்றது.

இத்திட்டம் தொடர்பாக விடுதலைப் புலிகளுடன் சர்வதேச வங்கிகளின் பிரதிநிதிகள் நேற்றுக் கிளிநொச்சியில கலந்துரையாடியுள்ளனர்.

உலக வங்கியின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி பீற்றர் ஹெறால்ட், ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கை வதிவிடப் பிரதிநிதி ஜோன் (14 ஆம் பக்கம் பார்க்க)



கிளிநொச்சியில் சர்வதேச வங்கிகளின் பிரதிநிதிகள் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை சந்திக்க வந்தபோது எடுக்கப்பட்ட படம். புலிகளின் பொருளாதார ஆலோசகர் ஜோய் மகேஸ்வரனும் படத்தில் உள்ளார். *(படம்: தேவா)*

### சிறுவர் நலன்கள் தொடர்பான

## இரு நாள்கள் பயிற்சிப்பட்டறை கிளிநொச்சியில் நேற்று ஆரம்பம்

கிளிநொச்சி,ஏப்.11

சிறுவர் நலன்கள் தொடர்பாக ஆராயும் இருநாள் பயிற்சிப்பட்டறை நேற்று வியாழக்கிழமை கிளிநொச்சி யில் ஆரம்பமானது.

'யுனிசெப்' அமைப்பின் ஏற்பாட்டில் இடம்பெறும் இப்பயிற்சிப்பட்டறை, இத்தாவிலில் ஐநா. அனுசரணையு டன் இயங்கும் ஆளணிக் கல்லூரியின் ஊக்குவிப்பாளர் கிறிஸ்ரியன் கொல்ஜ் தலைமையில் இடம்பெறுகிறது.

இப்பயிற்சிப்பட்டறை காலை 10 மணிக்கு ஆரம்பமாவதாக இருந்த போதிலும் அரசுத்தரப்பு பிரதிநிதிகள் வருகைதர தாமதமானதால சுமார் 2 மணிநேரம் கடந்து நண்பகல் 12 (14 ஆம் பக்கம் பார்க்க)

## 1000 தொண்டர் ஆசிரியர் நியமனம் குறித்து கொள்கையளவில் இணக்கம்!

### பிரதமர் - தமிழ் எம்.பிகள் சந்திப்பில்

கொழும்பு,ஏப்.11

வடக்கு - கிழக்கில் ஏற்கனவே தெரிவு செய்யப்பட்ட ஆயிரம் தொண் டர் ஆசிரியர்களுக்கும் நியமனம் வழங்கவேண்டும் என கொள்கை அள வில் இணக்கம் காணப்பட்டுள்ளதாக கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப் பினர் இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

பிரதமர் மற்றும் கல்வி அமைச்சரு டன் தமிழ்க் கூட்டமைப்பு நாடாளு மன்ற உறுப்பினர்கள் நேற்று நடத் திய சந்திப்பில் இந்த இணக்கம் ஏற்பட் டதாகவும் அவர் கூறினார்.

அலரிமாளிகையில் நடந்த இந்தச் சந்திப்பில் அமைச்சரவை செயலாளர், கல்வி அமைச்சு மேலதிகாரிகள், திறை சேரி அதிகாரிகள் ஆகியோர் கலந்து (14 ஆம் பக்கம் பார்க்க)

## அபிவிருத்திக் குழுவுக்கு ஆளுநரும் அமைச்சரும் இணைத் தலைவர்கள்!

யாழ். மாவட்ட அபிவிருத்திக் குழுவின் இணைத்தலைவர்களாக இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ் வரனும் வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் அசோகா ஜெயவர்த்தனாவும் பிரதமரால் நிய மிக்கப்பட்டுள்ளனர் என கொழும்பு செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ் மாவட்ட அபிவிருத்திக்கு 60 கோடி ரூபாவை வழங்குவதற்கு பிரத மர் அமைச்சர் மகேஸ்வரனுக்கு உறுதி அளித்துள்ளதாகவும் கூறப்பட்டது.

## ஜி.சீ.ஈ.சாதாரணதர முடிவுகள் பாடசாலைகளுக்குக் கிடைத்தன

யாழ்ப்பாணம்,ஏப்.11

கடந்த டிசெம்பர் மாதம் நடந்த ஜி.சீ.ஈ. (சாதாரண) தரப்பரீட்சை முடி வுகள் யாழ்.மாவட்டப் பாடசாலைக ளுக்கு நேற்றுக் கிடைத்தன.

கடந்த திங்கட்கிழமை பரீட்சைத் திணைக்களத்தினால் தபால் மூலம் அனுப்பப்பட்ட முடிவுகள் நேற்றுப் பாட சாலைகளுக்கு கிடைத்தன.

யாழ். நகரப் பாடசாலைகளின் முடிவுகள் சில வருமாறு:-

**யாழ்.இந்துக் கல்லூரி**

10 ஏ - நால்வர் (மகாதேவன் ஜெய சுதன், சிவப்பிரகாசம் மயூரன், பொன் னுத்துரை சிவபாலன், கதிரவேற் பிள்ளை தர்சனன்),

9 ஏ, பி, ஐவர், 9 ஏ. சி - ஒருவர், 9 ஏ, எஸ் - இருவர், 8 ஏ. 2 பி - நால் வர், 8 ஏ, பி, சி - எழுவர், 8 ஏ, 2 சி - ஒருவர், 8 ஏ, சி - ஒருவர்.

**யாழ்.இந்து மகளிர் கல்லூரி**

9 ஏ. பி - ஒருவர், 9 ஏ, சி - இரு வர், 9 ஏ, எஸ் - மூவர், 8 ஏ, பி, சி - இருவர், 8 ஏ, பி, எஸ் - இருவர், 8 ஏ, சி, எஸ் - ஒருவர், 8 ஏ, சி, ஒருவர், (14 ஆம் பக்கம் பார்க்க)

# எமதுசிறுவர்கள் பாதிக்கப்பட்டபோது தடுக்க எவரும் முன்வரவே இல்லை!

## அரசியல்துறைத் துணைப்பொறுப்பாளர் உரை

கிளிநொச்சி,ஏப்.11

தமிழ்ச் சிறார்கள் பாரபட்சமாக நடத்தப்பட்ட பொழுதும், அவர்களது அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்ட பொழுதும் அவற்றைத் தடுப்பதற்கு எந்த அமைப்பும் உரிய நேரத்தில் முன்வராதிருந்தமை விசனத்துக்குரியது. அவற்றைத் தடுப்பதற்குப் பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தால் இங்கே ஒரு யுத்தம் நடந்திருக்காது.

- இவ்வாறு தெரிவித்தார் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல துறைத்துணைப் பொறுப்பாளர் எஸ். தங்கன். சிறுவர் நலன்கள் தொடர்பாக ஆராயும் இருநாள் பயிற்சிப் பட்டறை நேற்று வியாழக்கிழமை கிளிநொச்சியில் ஆரம்பமானது. இப்பயிற்சிப்பட்டறையில் ஆரம்பஉரை நிகழ்த்துகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

குழந்தைகளின் நலனை மையமாகக் கொண்டு நடத்தப்படவிருக்கும் இப்பட்டறையை ஆரம்பித்து வைப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். இப்பட்டறையை ஒழுங்குசெய்து ஓர் உன்னதமான அர்ப்பணிப்பிற்கு உங்களை ஈடுபடுத்தியமைக்கு மனப்பூர்வமபன நன்றி கூற விரும்புகின்றேன். இதனை ஒழுங்கு செய்த 'யுனிசெவ்' அமைப்பிற்கு எனது நன்றியையும் பாராட்டுதல்களையும் தெரிவிக்கும் அதேவேளை, அவர்களின் இம் முயற்சி பலனளித்து எங்கள் குழந்தைகளின் வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்படும் என்று நம்புகின்றேன்.

வடக்கு - கிழக்குப் பிரதேசத்தில் வாழும் தமிழ் மக்கள் ஒரு கொடிய யுத்தத்திற்கும் பொருளாதாரத் தடைக்கும் போக்குவரத்துத் தடைகளுக்கும் முகம் கொடுத்தவர்கள். யுத்தம் நடக்கும் எந்தப் பிரதேசத்திலுமேயுள்ள இயல்பான விளைவாக - அதுவும் இரண்டு தசாப்தத்துக்கு மேற்பட்ட காலமாகத் தொடர்ந்து யுத்தம் நடைபெற்றது என்ற வகையில் - குழந்தைகளே பெரிதும் பாதிக்கப்பட்டவர்கள். அவர்கள் கல்வியும் வளரும் பருவத்தில் போசாக்கு நிலையும் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டன.

வாழ்வின் எல்லா அம்சங்களிலும் பாரபட்சத்திற்கு முகம் கொடுத்த இக குழந்தைகள், ஓர் எதிர்மறையாக, பாரபட்சமற்ற, கண்மூடித்தனமான குண்டுவீச்சுக்கும் வான் தாக்குதல்களுக்கும் தொடர்ச்சியான இடம்பெயர்வுகளுக்கும் ஆளாக நேரிட்டதுடன் பசி, பட்டினியை அப்பட்டமாகக் கண்டார்கள. சீருடையுடன் பாடசாலையில் இருக்கும் பொழுதும், விளையாட்டு மைதானங்களில் விளையாடிக்கொண்டிருந்த பொழுதும், கிராமங்கள் குண்டு வீச்சால் தாக்கப்படுமோ என அஞ்சி கோவில்களிலும் தேவாலயங்களிலும் தஞ்சம புகுந்த வேளைகளில் கூட, ஈவிரக்கமின்றிக் கொல்லப்பட்டார்கள். ஆயிரக்கணக்கான சிறார்கள் பெற்றோரை இழந்தனர். பலர் தம் தாய்மாரும் சகோதரிகளும் வல்லுறவுக்கு ஆளாக்கப்பட்டு கொல்லப்பட்டதைத் தங்கள் கண்களாலேயே கண்டனர். பலருக்கு மூத்த சகோதரர்கள் இரவோடு இரவாகக் காணாமல் போனார்கள்; அவர்களின் எலும்புக்கூடுகளே புதைகுழிகளிலிருந்து மீட்கப்பட்டன. அவற்றால் ஏற்பட்ட அச்சமும் பீதியும் அவர்களை விரக்தி நிலைக்குத் தள்ளியது.

இதுவே அவர்களுக்கு அநீதிக்கெதிராகப் போராடும் தைரியத்தைக் கொடுத்ததெனலாம். போராட வலுவற்ற சிறுவர்கள் தஞ்சம்புக வேறு இடங்களின்றி எங்கள் அமைப்புடன் இணைந்தார்கள். பொறுப்புள்ள ஒரு விடுதலை அமைப்பு என்ற வகையில் இது எங்களுக்குத் தரப்பட்ட ஒரு பாரிய பொறுப்பும் சவாலுமாக அமைந்தது. இவர்களைப் பாதுகாத்து நல்ல குடிமக்களாக்கும் பொறுப்பு எங்களுடையதாக இருந்தது. எதிர்காலச் சந்ததியின சுதந்திரத்துக்காகப் போராட்டத்தை ஆரம்பித்த எமது அமைப்பு, எங்களிடமுள்ள மட்டுப்படுத்தப்பட்ட வளங்களுடன் இந்தச் சிறார்களுக்குப் பாதுகாப்பும் கல்வியும் வழங்கும் பாரிய பணியை மேற்கொண்டது. இன்றும் தொடர்ந்து செய்துவருகின்றது; இந்த இடத்தில், முன்னைய அரசு இந்தக் கொடூரமான யுத்தத்தை மிகத் தீவிரமான முறையில் முன்னெடுத்ததைக் குறிப்பிடுவது பொருத்தமானது. ஆனால் மிகவும் கவலைக்குரியது குழந்தைகளுக்கெதிரான இந்த நடவடிக்கைகளைத் தடுப்பதற்கு எந்த அமைப்பும் உரிய நேரத்தில் முன்வராதிருந்தமை விசனத்திற்குரியது.

கடந்தகால அரசு நடத்திய பொய்ப் பிரசாரங்களையும், புனைகதைகளையும் பொருட்படுத்தாது, சில உள்ளூர் நிறுவனங்களின் உதவியுடன் எங்கள் அமைப்பு குழந்தைகளின் தேவைகளை ஓரளவிற்கேனும் நிறைவுசெய்ய முன்வந்தது; தொடர்ந்தும் செய்துகொண்டே இருக்கின்றது. தமிழ்ச் சிறார்கள் பாரபட்சமாக நடத்தப்பட்ட பொழுதும், அவர்களது அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்ட பொழுதும் அவற்றைத் தடுப்பதற்குப் பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தால் இங்கே ஒரு யுத்தம் நடந்திருக்காது; இத்தகைய ஒரு பட்டறைக்கான தேவையும்கூட ஏற்பட்டிருக்காது.

சமாதான ஒளிக்கீற்று தென்படத் தொடங்கியுள்ள காலம் என்ற வகையில் இப்பொழுதேனும் நாம் குழந்தைகளின துன்பங்களை நீக்கி, அவர்கள் இழந்த குழந்தைப்பருவ வாழ்க்கையை மீளளித்து நல்ல குடிமக்களாக வளர்வதற்குரிய சூழலை ஏற்படுத்த அர்ப்பணிப்புடன் கூடியுள்ளோம் என்பது மன நிறைவையும் ஆறுதலையும் தருகிறது. இந்த உன்னத பணியில் ஈடுபட முன்வந்திருக்கும் எல்லோரையும் குறிப்பாக 'யுனிசெவ்' நிறுவனத்தினையும் மனமாரப் பாராட்டுகிறேன். உங்கள் முயற்சி வெற்றியடைய எனது வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன்.

- இவ்வாறு எஸ்.தங்கன் தெரிவித்தார். (ஐ-9-8)

## ஆன்மீகச் சொற்பொழிவு

இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சின் யாழ்.மாவட்ட பிராந்திய அலுவலகம் நடத்தும் ஆன்மீகச் சொற்பொழிவில் இன்று மாலை 5.30 மணிக்கு யாழ்நாவலர் மணிமண்டபத்தில் 'பண்ணிசைச் செல்வி' சிவயோகராணி கதிரவேலு சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்துவார் (எ-ரி)

## ஒப்பந்தம் நடைமுறையில் உள்ளபோது புதிய முகாம்கள் அமைப்பதை ஏற்றுக் கொள்ளமுடியாது!

### யு.எஸ்.எய்ட் குழுவிடம் இணையம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.11

புரிந்துணர்வு ஒப்பந்தம் நடைமுறையில் உள்ள காலத்தில் படையினர் புதிய முகாம்களை அமைப்பதை ஏற்றுக்கொள்ளமுடியாது. யு.எஸ்.எய்ட் பிரதிநிதிகளிடம் யாழ்.மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையப் பிரதிநிதிகள் இவ்வாறு சுட்டிக்காட்டினர்.

நேற்றுப்பகல் 11.30 மணியளவில் இணையப் பணிமனையில் அதன் தலைவர் டாக்டர் வை.தியாகராஜா தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே இணையப் பிரதிநிதிகள் இதனைத் தெரிவித்தனர்.

இக்கலந்துரையாடலில் இணையப் பிரதிநிதிகள் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்நகரப் பகுதியில் உள்ள இரு ஹோட்டல்களில் முகாம் அமைத்துள்ள படையினர் அந்த முகாமை நகரின் இன்னொரு பிரதான பகுதியான மாநகரசபை வளாகம் மற்றும் கோட்டைப் பகுதி ஆகியவற்றை உள்ளடக்கிய பிரதேசத்தில் அமைப்பதற்கு முயற்சிகள் மேற்கொண்டு வந்தனர். இதனை நாம் எதிர்த்தோம்.

கடந்த பல வருடங்களுக்கு முன்பு வலி.வடக்கில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் இன்னமும் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர முடியாத நிலையில் உள்ளனர். அவர்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. பலர் நலன்புரி நிலையங்களில் வாழ்ந்து வருகின்றனர்.

உயர் பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் விவசாய நிலங்கள் பல கபளீகரம் செய்யப்பட்டுள்ளன. இதனால், குடாநாட்டில் பலர் எதுவித வேலைவாய்ப்புகளும் இன்றி உள்ளனர். பல குடும்பங்கள் தமது வீடு, வாசல்களை இழந்துள்ளன. மக்களிடையே போஷாக்கின்மை காணப்படுகிறது. என்று அவர்கள் தெரிவித்தனர்.

யு.எஸ்.எய்ட்டின் விசேட திட்ட அலுவலர் மைக்கல் ஜே டிஸ்சிஸ்ரி தலைமையிலான குழுவினர் இவை தொடர்பாக விளக்கமாகக் கேட்டறிந்து கொண்டனர். அத்துடன் இவற்றை உரிய இடங்களில் நிச்சயம் தெரியப் படுத்துவதாகவும் அக்குழுவினர் கூறினர்.

இணையத்தின் சார்பில் சு.பரமநாதன், வண. பிதா சி.ஜி.ஜெயக்குமார், நிர்வாக உத்தியோகத்தர் எஸ்.சோதிநாதன் உட்படப் பலரும் கலந்து கொண்டனர்.

(ஒ-10)

## நீதிமன்ற நடவடிக்கைகள் குறித்து ஆராய இன்று கூட்டம்

யாழ்ப்பாணம்,ஏப்.11

குடாநாட்டில் நீதிமன்ற நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்ளல் மற்றும் நீதிமன்ற விசாரணைகளை தமிழில் நடத்தல் போன்ற விடயங்கள் குறித்து ஆராய்வதற்கான விசேட சந்திப்பு ஒன்று இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்நீதிமன்றத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ்.நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா தலைமையில் இடம்பெறும் இந்தச் சந்திப்பில் மல்லாகம் நீதிவான் திருமதி ச.இளங்கோவன், ஊர்காவற்துறை நீதிவான் பா.சுப்பிரமணியம், பருத்தித்துறை நீதிவான் அ.பிரேமசங்கர், சாவகச்சேரி நீதிவான் வி.அரியநாயகம் ஆகியோரும் -

குடாநாட்டில் பணிபுரியும் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள், பொலிஸ் அத்தியட்சகர் ஆகியோரும் - கலந்து கொள்வர்.

பிரதம நீதியரசரின் கோரிக்கையின பேரில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்தச் சந்திப்பில், நீதிமன்ற நடவடிக்கைகளை துரிதமாக்கல், தமிழில் நீதிமன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளல், குடாநாட்டில் சட்டம் ஒழுங்கை சீராக்கல், பெருகிவரும் சமூகக் சீர்கேடுகளை ஒழித்தல் ஆகிய விடயங்கள் குறித்து ஆராயப்படவிருக்கின்றன.

## வழிகாட்டல் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஏப்.11

ஜி.சீ.ஈ. (உயர்தர) பரீட்சையில் வரலாறு பாடத்துக்குத் தோற்றவிருக்கும் மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டல் கருத்தமர்வு நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்.இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் இடம்பெறும் இக கருத்தரங்கில் யாழ். பல்கலைக்கழக உயர் பட்டப்படிப்புகள் பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் விரிவுரை நிகழ்த்தவுள்ளார்.

வரலாற்றுப் பாடத்துக்கு தோற்றும் மாணவர்கள் கருத்தமர்வுக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

(எ-3)

## சான்றிதழ்வழங்கும் வைபவம்

யாழ்ப்பாணம்,ஏப்.11

யாழ் கல்விவலயம் ஏற்பாடு செய்துள்ள முறைசாராக் கல்வி சான்றிதழ வழங்கும் வைபவம் இன்று காலை 9.30 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் மு.சிவம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன் , பிரதமவிருந்தினராகவும் யாழ். ஐ.நா. சிறுவர் நிதியத் தலைமை அதிகாரி செல்வி செலின் லக்கோபிரட் கௌரவ விருந்தினராகவும், யாழ். மத்தியகல்லூரி அதிபர் க. இராசதுரை, கல்விக்கழகப் பொறுப்பாளர் கவியன்பன், ஐநா. சிறுவர் நிதிய அதிகாரி அரூஸ்சுந்தராஜா ஆகியோர் சிறப்புவிருந்தினர்களாகவும் கலந்துகொள்வர். (எ-ரி-51)

## விளக்கமறியல் நீடிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.11

உரும்பிராய் சந்திரோதய வித்தியாசாலை மாணவி செ.துவாரகாவின் மரணம் தொடர்பாகச் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கும் பாடசாலைக் காவலாளியை எதிர்வரும் 23 ஆம் திகதி வரையும் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு யாழ் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

சந்தேக நபரான தில்லையம்பலம் ரமணன் (வயது 21) நேற்றுமுன்தினம் மீண்டும் மன்றில் ஆஜர் செய்யப்பட்டதை அடுத்து அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் இ.த.விக்னராஜா உத்தரவிட்டுள்ளார்.

கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் 27 ஆம் திகதி மேற்படி பாடசாலையின் ஐந்தாம்தர மாணவியான செல்வராசா துவாரகா (வயது 10) என்பவர் பாடசாலைக் கிணற்றில் இருந்து சடலமாக மீட்கப்பட்டமை தெரிந்ததே. (ஓ-10)

## ரயில் கட்டணங்களை அதிகரிப்பது குறித்து அரசாங்கம் ஆலோசனை

கொழும்பு,ஏப்.11

ரயில் கட்டணங்களை அதிகரிப்பது குறித்து அரசு ஆலோசித்து வருகிறது. ரயில்வே பொது முகாமையாளர் பிரியால் டி.சில்வா இதனைத் தெரிவித்திருக்கிறார்.

நஷ்டத்தில் இயங்கும் ரயில்வே திணைக்களம் இலாபகரமாக இயங்க வேண்டுமானால் கட்டணங்கள் 300 சதவீதம் அதிகரிக்கப்படவேண்டும் எனவும் நஷ்டமின்றி இயங்கவேண்டுமானால் 200 சதவீதம் அதிகரிக்கப்பட வேண்டும் எனவும் அவர் கூறியிருக்கிறார்.

பத்திரிகையாளர் மாநாடு ஒன்றில் இத்தகவல்களைத் தெரிவித்த அவர், ரயில் சேவையை திருப்திகரமாக நடத்த 200 புதிய ரயில் பெட்டிகளும் 12 முதல் 15 வரையிலான ரயில் என்ஜின்களும் தேவையெனவும் சொன்னார்.

இதற்கிடையில், ரயில் சேவையை அபிவிருத்தி செய்வது தொடர்பாக தனியார் முதலீட்டாளர்களின் ஒத்துழைப்பைப் பெறுவது குறித்து இந்திய நிறுவனம் ஒன்று ஆய்வு நடத்தி வருவதாகவும் ஆய்வு பற்றிய அறிக்கை கிடைத்ததும் அது குறித்து தீர்மானம் மேற்கொள்ளப்படுமெனவும் ரயில்வே பொது முகாமையாளர் மேலும் சொன்னார். (ஒ)

## அமெரிக்காவை எதிர்த்து கொழும்பில் இன்று மனித சங்கிலிப் போராட்டம்

### நண்பகல் தொழுகையின் பின் இடம்பெறும்

கொழும்பு,ஏப்.11

அமெரிக்காவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து இன்று கொழும்பில் மனித சங்கிலிப் போராட்டம் நடைபெறும்.

ஜம்ா அதே இஸ்லாமி அமைப்புடன் பல்வேறு அமைப்புக்கள் இணைந்து இந்த மனித சங்கிலிப் போராட்டத்தை நடத்தவுள்ளன. இன்று ஜும் ஆ தொழுகைக்குப் பின்னர் மருதானையில் இப்போராட்டம் ஆரம்பமாகும்.

ஜமா அதே இஸ்லாமி அமைப்பு மனித சங்கிலிப் போராட்டத்தை ஏனைய முக்கிய நகரங்களிலும் நடத்தவுள்ளது. ஜும் ஆ தொழுகையின் பின்னர் இந்தப் போராட்டங்கள் நடைபெறும்.

(ஒ)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,ஏப்.11

யாழ்ப்பாணம், வண்ணை குளங்கரை மருத்டி ஸ்ரீ காமாட்சி அம்பாளின் வருடாந்த மஹோற்சவம் கடந்த 2 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது.

தொடர்ந்து 19 தினங்கள் உற்சவங்கள் இடம்பெற்றுவருகின்றன. எதிர்வரும் 15 ஆம் திகதி தேர் உற்சவமும் மறுநாள் தீர்த்த உற்சவமும நடைபெறும்.

★ ★ ★

யாழப்பாணம்,ஏப்.11

அராலி வடக்கு மயிலியற்புலம் கந்தசுவாமி ஆலயத்தின் மணவாளக் கோல விழா இன்று வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறும். இரவு 7 மணிக்கு திருக்கல்யாணமும் சுவாமி வீதி வலம் வருதலும் இடம் பெறும்.

## விளையாட்டு நிகழ்வுகள்

வலி. வடக்கு,ஏப்.11

யாழ். மாவட்ட தாச்சி சங்கத்தின் அனுசரணையுடன் இணுவில் அண்ணா விளையாட்டுக் கழகம் நடத்தி வரும் தாச்சிச் சுற்றுப் போட்டியில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 4.45 மணிக்கு அண்ணா விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறும் ஆட்டத்தில் நவாலி தென்றல் வி.க வும் கோண்டாவில் மறுமலர்ச்சி வி.க வும் பங்குபற்றுகின்றன.

(ஒ-86)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஏப்.11

கோண்டாவில் மறுமலர்ச்சி விளையாட்டுக் கழகம் நடத்தும் தாச்சி சுற்றுப் போட்டியில் இன்று வெள்ளிக்கிழமை நடைபெறும் அரையிறுதி ஆட்டத்தில் உடுவில் ஐக்கிய விளையாட்டுக் கழகமும்; உடுவில் உதய சூரியன் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன.

இப் போட்டியின் இறுதியாட்டம் நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ளது. (ஒ-5)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஏப்.11

வடக்கு - கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் அனுசரணையுடன் நடத்தப்படும் யாழ். மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகள் நாளை சனிக்கிழமை முதல் ஆரம்பமாகின்றன.

நாளை சனிக்கிழமை காலை 8.00 மணிக்கு புத்தூர் வீனஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறும் ஆண்களுக்கான எல்லே சுற்றுப்போட்டிகளில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

நல்லூர் பிரதேச செயலக அணி எதிர் கரவெட்டி பிரதேச செயலக அணி.

சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணி எதிர் உடுவில் பிரதேச செயலக அணி.

நெடுந்தீவு பிரதேச செயலக அணி எதிர் கோப்பாய் பிரதேச செயலக அணி.

சாவகச்சேரிப் பிரதேச செயலக அணி எதிர் ஊர்காவற்றுறை பிரதேச செயலக அணி.

வேலணை பிரதேச செயலக அணி எதிர் கரவெட்டிப் பிரதேச செயலக அணி.

தெல்லிப்பழை பிரதேச செயலக அணி எதிர் மருதங்கேணி பிரதேச செயலக அணி. (ஒ-5)

## போருக்குப் பின்னர்

# ஈராக்கைப் புனரமைப்பதில் உலக நாடுகளிடம் பிளவு!

நியூயோர்க்,ஏப்ரல்11

**ஈராக் தலைநகர் பக்தாத்தின் மையப் பகுதிக்குள் அமெரிக்கப் படைகள் ஊடுருவியதை அடுத்து அங்கு அதிபர் சதாமின் ஆட்சி முடிவுக்கு வந்துள்ளது. இதனால், அங்கு இடைக்கால அரசு ஒன்றை ஏற்படுத்துவதில் அமெரிக்கா கவனம் செலுத்தி வருகின்றது. இந்த விடயத்தில் உலக நாடுகள் இரண்டுபட்டுள்ளன.**

**போருக்குப் பின்னர் ஈராக்கை நிர்வகிப்பது மற்றும் அதனைப் புனரமைப்பது குறித்து ஒரு புறத்தில் அமெரிக்கா தலைமையிலான கூட்டணி ஆராயும் அதேவேளை, மறுபுறத்தில் பிரான்ஸ், ஜேர்மனி, ரஷ்யா என்பனவும் அந்த விடயம் குறித்து வேறாக ஆராய்ந்து வருகின்றன.**

இதனால், ஈராக் போர் குறித்து உலகநாடுகள் இரண்டாகப் பிளவுபட்டதுபோன்றதொரு நிலை அதன் பின்னரும் தொடருகின்றது.

அதேசமயம், ஏனைய நாடுகளின கருத்துக்களைப் புறந்தள்ளிவிட்டு பக்தாத்தில் அவசர அவசரமாக இடைக்கால அரசு ஒன்றை அமைப்பது குறித்து அமெரிக்கா தீவிரமாக ஆராய்ந்து வருகின்றது.

அதன்படி ஈராக்கியத் தலைவர்களுடன் பேச்சு நடத்துவதற்கு அமெரிக்கா முடிவு செய்துள்ளது. நாளை சனிக்கிழமை நஸீரியாவில் உள்ள விமானப் படைத்தளத்தில் ஈராக் தலைவர்களுடனான ஆலோசனைக் கூட்டம் நடக்க இருப்பதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

முதற்கட்டமாக 43 தலைவர்களை பேச்சுக்கு அழைக்க அமெரிக்கா முடிவு செய்துள்ளது. இதில் 29பேர் ஈராக்கில் இருக்கிறார்கள். ஏனைய 14பேர் ஈராக்கால் நாடு கடத்தப்பட்டவர்களாவர். இவர்களில் முக்கியமானவர் ஈராக் தேசிய காங்கிரஸ் கட்சித் தலைவர் அஹமது செலாபி ஆவார்.

அவர் ஏற்கனவே நஸீரியா சென்றுவிட்டார். அமெரிக்க இராணுவ பாதுகாப்பில் அவர் உள்ளார். ஈராக் தலைவர்களை தேர்வு செய்வதில் அமெரிக்காவுடன் செலாபிக்கு சில கருத்து வேறுபாடு நிலவிவருகின்றது.

தற்போது அமெரிக்கா தேர்வு செய்துள்ள ஈராக்கியத் தலைவர்களில் பெரும்பாலானவர்கள் பழங்குடி மற்றும் கிராமப்புறங்களில் உள்ளவர்கள். நகர்ப்புறங்களில் உள்ள தலைவர்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளதாக செலாபி குற்றஞ்சாட்டி வருகின்றார்.

அதேசமயம், திட்டமிட்டபடி கூட்டம் நாளை இடம்பெறுமா என்றும் சந்தேகங்கள் கிளப்பப்பட்டு வருகின்றன. உள்நாட்டுப் பாதுகாப்புப் பற்றி ஆராய்ந்த பின்னர் இதுபற்றிய இறுதி முடிவு எடுக்கப்படும் என்கின்றன வெள்ளை மாளிகை வட்டாரங்கள்.

இதற்கிடையில் -

ஈராக்கைப் புறக்கணிப்பது மற்றும் போருக்குப் பின்னரான ஈராக்கின் நிர்வாகம் என்பன பற்றி பிரான்ஸ், ஜேர்மனி மற்றும் ரஷ்யா என்பன ரஷ்யாவின் சென்பீற்றர்ஸ் பேர்க் நகரில் இன்று கூடி ஆராய இருக்கின்றன.

பிரான்ஸ் அதிபர் ஜக் ஷிராக், ஜேர்மனிய அதிபர் ஜெறாஸ்ட் ஷ்ரோடர் மற்றும் ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் ஆகியோர் இந்த மாநாட்டில் கலந்துகொண்டு ஈராக் மறுசீரமைப்பு பற்றியும் அதில் ஐ.நாவின் பங்கு, பணி குறித்தும் முக்கியமாக விவாதிக்கப்படவுள்ளதாக ஜேர்மன் அரசின் செய்தித் தொடர்பாளர் பேர்லினில் தெரிவித்தார்.

போருக்குப் பின்னான ஈராக்கின் புனரமைப்பில் ஐ.நா. முக்கிய பணியாற்ற வேண்டும் என்று ஏற்கனவே இந்த மூன்று நாடுகளும் வேண்டுகோள் விடுத்துள்ளன.

மாநாட்டில் பங்கேற்பதற்காக இன்று சென்.பீற்றர்ஸ்பேர்க் செல்ல உள்ளதாக ஜேர்மன் அதிபர் ஜெறாஸ்ட் தெரிவித்தார்.

(ம)

## சண்டை நீடிக்கிறது!


பக்தாத்,ஏப்.11

ஈராக் தலைநகர் பக்தாத்தின் மத்திய பகுதியில் அமெரிக்கப் படைகள் நுழைந்து, சதாம் அரசு ஆட்சியில் இருந்து அகற்றப்பட்டு விட்டதாக அமெரிக்கா அறிவித்து விட்டாலும் பக்தாத்தில் இன்னும் சண்டை தொடர்ந்து கொண்டிருக்கின்றது.

நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அமெரிக்க பாதுகாப்புத் துறை அமைச்சர் ரொனால்ட் ரம்ஸ்பீல்ட் இதனை ஒப்புக்கொண்டார். இன்னும் சில தினங்களுக்கு ஈராக்கில் சண்டை தொடரலாம் என்றும் அவர் சொன்னார்.

இருபுறங்களால் பக்தாத்தின் மையப்பகுதியில் நுழைந்த அமெரிக்கப் படைகள், மேலும் நகர்ந்து பக்தாத் முழுவதையும் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்கு முயன்றுவருகின்றன. அவற்றுடன் ஈராக்கிய குடியரசுப் படையினர் ஆங்காங்கே கடும் சண்டைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

சிறிய ரக ஆயுதங்களையும் மோட்டார்களையும் கொண்டு அவர்கள் தாக்குதல் நடத்தி வருவதாக அமெரிக்கப் படையினர் தெரிவிக்கின்றனர்.



ஈராக்கில் அமெரிக்கா தொடர்ந்துவரும் போரில் கைது செய்யப்பட்ட ஈராக்கியப் படையினர் சிலரை அமெரிக்கா நடத்திவரும் விதத்தை படத்தில் காணலாம். இந்தப் போரில் 7 ஆயிரத்து 800 ஈராக்கியர்கள் போர்க் கைதிகளாக பிடிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவரும் யுத்த குற்றவாளிகளாகவே கணிக்கப்படுவர் என்று அமெரிக்கா அறிவித்துள்ளது.

## உலகின் வயதான 'அம்மா'

உலகின் மிக வயதான தாயாராக இந்தியாவைச் சேர்ந்த பாடசாலை ஆசிரியை ஒருவர் பெருமை பெற்றுள்ளார். 65 வயதான அவர் ஓர் ஆண் குழந்தையை பெற்றெடுத்ததன் மூலம் இந்த பெருமையைப் பெற்றுள்ளார்.

சத்தியபாமா மேகபத்திரா என்ற அந்தப் பெண் ஒரிஸா மாநிலத்தைச் சேர்ந்தவர். ஏற்கனவே 63 வயதில் குழந்தைபெற்ற பெண் ஒருவரே மிக வயதான தாயாராக இருந்தார். இப்போது அவரது சாதனையை சத்தியபாமா முறியடித்துள்ளார்.

அவரது ஆண்குழந்தை மூன்று கிலோ கிராம் எடையுடன் நல்ல தேகாரோக்கியத்துடன் இருப்பதாக 'ரைம்ஸ் ஒவ் இந்தியா' பத்திரிகை தெரிவிக்கிறது.

சத்தியபாமாவும் அவரது கணவனும் திருமணமாகி 50 வருடங்கள் கழிந்துவிட்டன. எனினும், இதுவே அவர்களது முதல் குழந்தை.

பரிசோதனைக்குழாய் சிகிச்சை மூலமே இந்தக் குழந்தை பிறந்ததாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன. இதற்காக சுமார் 30 ஆயிரம் ரூபாய் இந்தியப் பணம் செலவழிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

சத்தியபாமாவும் அவரது கணவர் கிருஷ்ணச்சந்திராவும் எடுத்துக்கொண்ட ஊக்கமே குழந்தை நல்லபடியாகப் பிறப்பதற்கு உதவியதாக மருத்துவர்கள் தெரிவித்தனர்.

(ம)

## ஆட்டம் முடிந்து விட்டது என்கிறார் ஈராக் தூதுவர்

அமெரிக்கா பக்தாத்தின் மையப் பகுதிக்குள் நுழைந்ததைத் தொடர்ந்து "இந்த ஆட்டம் முடிவுக்கு வந்துவிட்டது" என்று ஐநாவுக்கான ஈராக் தூதர் மொஹமட் அல்டோரி தெரிவித்துள்ளார்.

நியூயோர்க்கில் அவர் செய்தியாளர்களிடம் பேசினார். அப்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சதாமின் ஆட்சி ஈராக்கில் முடிவுக்கு கொண்டு வரப்பட்டது குறித்து அவரிடம் செய்தியாளர்கள் கேள்விகளை தொடுத்தனர். அதற்கு பதிலளித்த அவர், "இந்த ஆட்டம் முடிவுக்கு வந்துவிட்டது, இப்போது நான் அமைதியை எதிர்பார்கிறேன். ஒவ்வொரு ஈராக்கியர்களும் அதனையே எதிர்பார்க்கிறார்கள். அமைதியும் பாதுகாப்பான வாழ்க்கையும் தொடர வேண்டும் என நான் எதிர்பார்க்கிறேன்." - என்றார் அல்டோரி.

சதாம் இன்னும் பக்தாத்தில் உயிருடன் இருக்கிறாரா? என்று செய்தியாளர்கள் கேட்டதற்கு கடந்த சில நாள்களாக தனக்கும் ஈராக்குக்கும் இடையே தொலைத் தொடர்புகள் ஏதும் இல்லை என்று அவர் பதிலளித்தார்.

"எனக்கு சதாமுடன் உறவுகள் இல்லை. ஆகவே, என்னால் எதனையும் சொல்லமுடியாது. கடந்த சில நாள்களாகவே ஈராக்குடன் எந்தத் தொடர்புகளுமின்றி இருக்கிறேன். நான் இப்போது இருப்பது நியூயோர்க்கில். ஆகவே, அங்கே (ஈராக்) என்ன நடக்கின்றது என்று எனக்குத் தெரியாது. தொலைக்காட்சி மூலமே நானும் செய்திகளை அறிந்துகொண்டு இருக்கிறேன்." என்றார் அல்டோரி.

இதேவேளை -

ஈராக்கில் உடனடியான போர் நிறுத்தம் ஒன்றை கொண்டு வரவேண்டும் என்று வலியுறுத்தி ஐ.நாவை கூட்டுமாறு அரபு நாடுகள் கோரிக்கை விடுத்திருந்தன. ஆனால், பக்தாத்துக்குள் அமெரிக்கப்படைகள் நுழைந்துள்ளதையடுத்து இந்தக் கோரிக்கையை அரபு நாடுகளில் வாபஸ்பெற முடிவு செய்துள்ளது.



பக்தாத்தில் சதாமின் ஆட்சி வீழ்ந்ததைத் தொடர்ந்து தனது மகிழ்ச்சியைத் தெரிவிக்கும் ஈராக்கிய பெண் ஒருவர். அவரின் பின்னால் அமெரிக்க டாங்கி ஒன்று.

## துப்பாக்கிச் சண்டையின் போது

# மேற்குக் கரையில் நால்வர் உயிரிழப்பு

ஜெருசலேம்,ஏப்.11

மேற்குக்கரையில் ஜெப்சி குடியிருப்பு பகுதியில் நேற்று இடம்பெற்ற மோதலில் குறைந்தது இரு பலஸ்தீனர்களும் இரு இஸ்ரேலியர்களும் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பிகோட் குடியிருப்பில் இந்தச் சண்டை இடம்பெற்றுள்ளது. இரண்டுகும் மேற்பட்ட பலஸ்தீன ஆயுததாரிகள் இஸ்ரேலியர் குடியிருப்பாளர் மீது துப்பாக்கியால் சுட்டதாக இஸ்ரேலிய இராணுவம் கூறுகிறது. அதில் இரு இஸ்ரேலியர்கள் உயிரிழந்தனர். பதிலுக்கு இரு பலஸ்தீனர்களை இஸ்ரேல் சுட்டுக்கொன்றது.

கடந்த இரு நாள்களில் காஸா பகுதியில் நடந்த இத்தகைய வன்முறைச் சம்பவங்களில் 12 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த புதிய இரத்தக்களறியை வாஷிங்ரன் கடுமையாகக் கண்டித்துள்ளது. ஈராக் போர் முடிந்த ஒருமாதத்தில் மத்திய கிழக்கில் அமைதியை ஏற்படுத்துவதற்கான புதிய திட்டம் ஒன்றை ஆரம்பிக்கபோவதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

# தென்ரஷ்ய பாடசாலை தீ விபத்தில் 28 குழந்தைகள் கருகி மாண்டனர்!

மொஸ்கோ,ஏப்.11

ரஷ்யாவில் தென்பகுதியில் உள்ள பாடசாலைக் கட்டடம் ஒன்றில் தீப்பற்றி எரிந்ததில் அதன் விடுதியில் தங்கியிருந்த மாணவர்களில் 28 பேர் தீயிற் கருகி பரிதாபகரமாக உயிரிழந்தனர்.

தென்பகுதி நகரான டகெஸ்ரனில் உள்ள பாடசாலையே தீ விபத்துக்குள்ளானது. உள்ளூர் நேரப்படி அதிகாலை 2.30 மணிக்கு திடீரென தீ பாடசாலைக் கட்டடங்களை சூழ ஆரம்பித்தது. பாடசாலை அருகிலேயே இருந்த மாணவர் விடுதிக் கட்டடத்தையும் தீ சடுதியாகச் சூழ்ந்துகொண்டது.

அச்சமயம், விடுதியில் தங்கிருந்த மாணவர்கள் ஆழ்ந்த நித்திரையில் இருந்தனர். விடுதியில் தீ பரவியதும் அவர்களில் பலர் கருகி மாண்டனர். "28 குழந்தைகள் உயிரிழந்தனர் என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது; மேலும் 16 பேர் தீ காயங்களுக்கான விசேட நிலையத்தில் வைத்து பராமரிக்கப்படுகின்றனர். அவர்கள் தவிர 104 மாணவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்." - என்றார் பாடசாலையின் நிர்வாகி ஒருவர்.

கடந்த ஒருவாரத்தில் ரஷ்யாவில இடம்பெறும் பாடசாலை தீ விபத்து சம்பவங்களில் இது இரண்டாவதாகும். கடந்த திங்களன்று சைபீரியா என்ற கிராமத்தில் நிகழந்த இதுபோன்றதொரு பாடசாலை தீ விபத்தில் 22 குழந்தைகள் தீயில் கருகி மாண்டனர்.

நேற்று நடந்த சம்பவத்துக்கு காரணம் என்ன என்பது உடனடியாக சரிவரத் தெரியவில்லை. எனினும், மின சாரச் சுற்றுகளில் ஏற்பட்ட ஒழுக்கு காரணமாகவே இந்த விபத்து ஏற்பட்டதாக நம்பப்படுகின்றது.

இது குறித்து உடனடி விசாரணைகளுக்கு உத்தரவிட்டுள்ளதாக உள்துறை அமைச்சகம் அறிவித்துள்ளது.

# நெஞ்சம் விட்டு நீங்காத நினைவலைகளும் மனதிலிருந்து மாறாத சோகங்களும்

ஒன்பதாமாண்டு

நாலாமாண்டு







**செல்வி சரோஜினிதேவி செல்வரத்தினம்**
(குஞ்சு)
(யா/புத்றாளை மகாவித்தியாலயம், ஆண்டு 10 மாணவி)

ஆண்டவன் படைப்பு **05.09.1976**
அநியாய அழிப்பு **16.03.1994**

பாசத்தின் சுமையோடு பறந்து சென்ற தேவியே!
இருவிழி சிந்திய நீர்த்துளி இன்னும் காயவில்லை தேவியே!
அதற்குள்ளே ஒன்பதாண்டுகள் ஆனதம்மா! எங்கள்
விழி எல்லாம் நீர் தேங்கி நிற்கிறதம்மா!

**செல்வன் செல்வரத்தினம் இலங்கேஸ்வரன்**
(ரஞ்சன்)
(யா/உடுப்பிட்டி அமெரிக்கன்மிஷன் கல்லூரி ஆண்டு10 மாணவன்)

ஆண்டவன் தந்தார் **21.02.1983**
அவரே அணைத்தார் **26.03.1999**

திகதி : 11.04.2003

என் அன்புச் செல்வமே!
நாலாண்டுகள் கழிந்தாலும் ஆறவில்லை எம் சோகம்!
மாறவில்லை எம்வேதனை எங்களைக் கண்ணீரில் தவிக்கவிட்டு
கடவுளிடம் சேர்ந்த மாயம்தான் என்ன?
உங்கள் பூமுகம் காண ஏங்குகின்றோம் நாம்!
அன்பு முகம் காணாமல் இங்கு வாடுகின்றோம்!

**உங்கள் இருவரின் ஆத்மாக்கள் சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.**

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

நிரந்தர முகவரி: *கரணவாய்மேற்கு, கல்லுவம்.*
தற்காலிக முகவரி:
**ஸ்ரீதேவி சைவ உணவகம்**
மந்திகை அரசினர் ஆஸ்பத்திரி முன் வீதி,
புலோலி தெற்கு, புலோலி.

உங்கள் பிரிவால் துயருறும்:
அப்பா, அம்மா, அண்ணாமார்,
அக்கா, தம்பி, தங்கைமார்.
அண்ணன் - கமலேஸ்வரன் } சுவிற்ஸர்லாந்து
அண்ணி - பாமதி

(16591)

## ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயம், ஈவினை பரிபாலன சபை தெரிவுசெய்வதற்கான அறிவித்தல்

## மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

வழக்கிலக்கம்: நானாவிதம்/49

1. இராசரத்தினம் விஸ்ணுகரன்
மற்றும் 20 பேரும்,
அனைவரும், ஈவினை,
புன்னாலைக்கட்டுவன்.
- வழக்காளிகள் -

எதிர்

1. சங்கரப்பிள்ளை இராசலிங்கம்
மற்றும் 05 பேரும்,
- எதிராளிகள் -

மேற்கூறிய வழக்கு மாவட்ட நீதிமன்றம் மல்லாகத்தில் 03.04.2003ஆம் திகதி கூப்பிடப்பட்டபோது ஆலய வளர்ச்சியைக் கவனத்திற்கொண்டு இரு சாராரும் தமக்குள் ஓர் இணக்கத்திற்கு வந்த அடிப்படையிலும், இரு பகுதியினரும் ஏகோபித்து பூரண சம்மதத்துடன் மன்றில் தரப்பட்ட 278 பெயர்களைக் கொண்ட வழிபடுவோர் அங்கத்தவர்களின் பட்டியலை உள்ளடக்கிய ஒரு பொதுச்சபை மூலம் ஒரு நிர்வாக/பரிபாலன சபை தெரிவுசெய்து ஆலய நடவடிக்கைகளைப் பரிபாலிக்கக் கூடியதாக ஒரு சபையை ஆக்குகின்ற ஓர் உத்தரவை இந்நீதிமன்றம் பிறப்பித்ததன் அடிப்படையில் எதிர்வரும் 18.04.2003ஆம் நாள் மு.ப. 10.00 மணிக்கு ஆலய முன்றிலில் தெரிவுக்கூட்டம் ஒன்று நடைபெறவுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இப்பட்டியலில் இடப்பட்டுள்ள அங்கத்தவர்கள் விவரங்களை அறிய விரும்பின் கூட்டத் திகதிக்கு 3 நாள்களுக்கு முன் ஆலய முற்பகுதியிலும், ஈவினை மத்தி கற்பக விநாயகர் சனசமூக நிலையத்திலும், ஆலயப் பகுதி கிராம சேவையாளர் காரியாலயத்திலும் (ஜே/209) பார்வையிடலாம்.

மேலும் இக்கூட்டம் தெரிவு சிறப்புற நிறைவேற அனைத்து அங்கத்தவர்களின் ஒத்துழைப்பும் நாடப்படுகிறது.

மன்றின் கட்டளைப்படி

**ம.செல்வரட்ணம்**
பதிவாளர்,
மாவட்ட நீதிமன்றம்,
மல்லாகம்.

(16599)



# பஜாஜ் புது வருடம்



# பிரத்தியேக கொடுப்பனவு

2003 ஏப்ரல் 1ம் திகதியிலிருந்து 30ம் திகதி வரை
கொள்வனவுக் கட்டளை சமர்ப்பிக்கப்படும் ஒவ்வொரு
பஜாஜ் முச்சக்கர வண்டியுடன்

## ஒரு சோடி பக்கத் திரைகளும்



# இலவசம்!

**டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட்**

த. பெ. 1909, 75, ஹைட்பார்க் கோணர், கொழும்பு 02. தொ. பே: 074-700600, பக்ஸ்: 074-700677, 687175
பிரதேச கிளை அலுவலகங்கள்: 174B,கட்டுகஸ்தோட்டைவீதி, கண்டி. தொ. பே: 08-226146 பக்ஸ்: 08-238134
27 E, வியாபார ஸ்தானம், தெகியத்தகண்டிய. தொ. பே: 027 50037 பக்ஸ்: 027-50222
382, அனகாரிக்க தர்மபால மாவத்தை, மாத்தறை. தொ. பே: 041-28488 பக்ஸ்: 041-27488
நீகல் மாவத்தை, அம்பாறை. தொ. பே: 063-22997 பக்ஸ்: 063-23662
31பீ, மைத்திரிபால சேனாநாயக்க மாவத்தை, அநுராதபுரம். தொ. பே. 025-25048/9 பக்ஸ்: 025-25050
தனசிரி கட்டிடம், இல. 195, பிரதான வீதி, இரத்தினபுரி. தொ. பே/பக்ஸ்: 045-22389
இல. 116, குருணாக்கல் வீதி, புத்தளம். தொ. பே/பக்ஸ்: 032-65527 பிராந்திய அலுவலகம் இலக்கம் 72, தரங்காகட்டிடம் பாக் வீதி, நுவரெலியா. 052-35760, 052-35761

Tradlanka

உதயன்

## பௌத்த பீடாதிபதியிடமிருந்து நாட்டுக்கு நல்லுபதேசம்

"யுத்தம், யுத்தம் என்று அழுத்தம் கொடுத்தது போதும். அந்த வார்த்தையை அடியோடு மறந்து விடுங்கள். சமாதான முன்னெடுப்புகளுக்கான சகல முயற்சிகளும் அனைத்துத் தரப்பினராலும் மேற் கொள்ளப்பட வேண்டும். யுத்தத்தின் கொடுமை களை நாம் அனுபவித்தது போதும்."

- இவ்வாறு உபதேசம் செய்திருக்கிறார் அஸ் கிரிய பீடாதிபதி வண.உடுகம ஸ்ரீபுத்தரக்கித்த மகாநாயக்கர்.

கண்டி ஐக்கிய பௌத்த சங்க மண்டபத்தில் இடம்பெற்ற சமாதான முன்னெடுப்புத் தொடர்பான நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்று கையிலேயே அவர் இவ்வாறு கூறியிருக்கின்றார்.

பௌத்த பீடாதிபதி ஒருவரின் மனதில் இருந்து இவ்வாறு நல்லுபதேசம் பிறந்திருப்பது தற்போதைய சமாதான முயற்சிகளுக்குக் கிடைத்துள்ள நல்ல தொரு பக்கபலம்.

தமிழர்களின் நியாயமான உரிமைகள் மறுக்கப் பட்டதும், அவர்களது அடிப்படை அபிலாஷைகள் நிறைவு செய்யப்படாததும் நாட்டில் இனப்பிரச்சினை தீவிரமாகி பெரும் யுத்தமாக வெடிக்கக் காரணங் களாயின.

இனப்பிரச்சினைக்கு சமரசத் தீர்வு காணும் முயற்சிகள் - கடந்த ஐந்து தசாப்த காலத்தில் பல தடவைகள் ஆரம்பிக்கப்பட்டும் அவை தோல் வியில் முடிவடைந்தன. தமிழர்களுக்கு நியாயமான உரிமைகளை வழங்குவதற்கு சிங்கள, பௌத்த தீவிரவாதம் மறுத்து முட்டுக்கட்டை போட்டு வந்த மையே சமரச முயற்சிகள் தோல்வியில் முடியவும், இனச்சிக்கல்கள் மோசமாகி விஸ்வரூபம் எடுக் கவும் அடிப்படையாய் அமைந்தன.

இந்த நிலையில், சிங்கள - பௌத்த - மத வாதத் தலைமையிடமிருந்து இப்போது பொறுப் புள்ள - அர்த்தமுள்ள - கருத்துகள் வெளிவந் திருக்கின்றன.

"கடந்த இருபது வருட கால யுத்தத்தால் பேரழிவுகள் ஏற்பட்டுள்ளன. அப்பாவி மக்கள் ஆயி ரக் கணக்கில் கொல்லப்பட்டுள்ளனர்.

பேச்சு மூலமாகத் தீர்வு காண்பதற்காகத் தற் போது இடப்பட்டிருக்கும் அடித்தளம் நன்கு பாது காக்கப்பட வேண்டும். யுத்தம் நடக்க, நடக்க குரோதமும் விரக்தியும் அழிவும் அதிகரிக்கும். எனவே, யுத்தம் என்ற வார்த்தைப் பிரயோகத்தை நாம் மறந்து விடவேண்டும் -" என்றும் அஸ்கிரிய மகா நாயக்கர் இப்போது வலியுறுத்தியிருக்கின்றார்.

இராணுவ ரீதியில் - யுத்த வழியில் - புலிகளைத் தோற்கடித்த பின்னரே இனப்பிரச்சினைக்கு அமை தித் தீர்வு காணும் சமாதானப் பேச்சுகள் ஆரம் பிக்கப்பட வேண்டும் என்று கங்கணம் கட்டி நிற் கின்றது சிங்கள இனவாதக் கட்சியான ஜே.வி.பி.

சமாதானப் பேச்சுகள் தொடரப்பட வேண்டும்; யுத்தத்தினால் தீர்வுகாண முடியாது என்று ஒரு புறம் வெளியுலகுக்குக் கூறிக்கொண்டு, மறுபுறம் யுத்த வெறி கொண்டு அலையும் ஜே.வி.பியோடு கூட்டுச் சேர முயல்கின்றார் ஜனாதிபதியும் பொ.ஐ. மு. தலைவியுமான சந்திரிகா குமாரதுங்க.

'சமாதானத்துக்கான யுத்தம்' என்ற கோமா ளித்தனமான கொள்கையை முன்னெடுத்து அதைச் செயற்படுத்த முடியாமல் தோல்வி கண்டவர் அவர். அதன் பின்னரும் யுத்த வெறி கொண்ட குழுவைத் தன்னோடு அணி சேர்க்க அவர் முயல்வதுதான் ஆச்சரியப்பட வைக்கின்றது.

பௌத்த குருமாரே இன்று மனம் மாறி 'யுத்தம்' என்ற சொல்லையே மறந்துவிடுங்கள் என்று மக்க ளுக்கு ஆலோசனை கூற முன்வந்துள்ளனர். ஆனால், பதவியாசை பிடித்த அரசியல்வாதிகள் மட்டும் அதை விடுவதாயில்லை; திருந்துவதாயு மில்லை.

பதவியைக் கைப்பற்றுவதற்காக இனவாதத் தையும் யுத்தவெறியையும் தூண்டிவிடும் அரசியல் வாதிகளை மக்கள் முற்றாக வெறுத்து, ஒதுக்கி நிராகரிக்கும் வரை யுத்தம் என்ற சொல்லை நமது நாடு மறப்பது துர்லபமே.

"யாழ்.மற்றும் வடக்கு - கிழக்கு பிரதேசங்களுக குச் சென்று ஆங்குள்ள மக்களின் வாழ்க்கை நலம் குறித்து உரையாட விரும்புகிறேன். அதற் கான அழைப்புக் கிடைக்குமாயின் அங்கு செல்லத் தயாராக இருக்கின்றேன்" - என்றும் அஸ்கிரிய பீடாதிபதி கூறியிருக்கின்றார். அவரது விருப்பம் சம்பந்தப்பட்டோருக்குச் சமர்ப்பணம்.

## இசை, நடன, நாடக விழாவின் நான்காம் நாள் நிகழ்ச்சிகள்

திருகோணமலை,ஏப்.11

திருகோணமலையில் நடைபெற்றுவரும் 'மானுடத்தின் தமிழ் கூடல் II' இசை, நடன, நாடக விழாவின் நான்காம் நாள் நிகழ்ச்சிகள் இன்று நடைபெறவுள்ளன.

இன்றையு நிகழ்ச்சியில் நாடாளுமன்ற உறுப்பினர் க.துரை ரட்ணம் மங்கள விளக்கேற்றுவார். விழாச் சுடரை திருமதி புவனா தண்டாயுதபாணி, நெடுந்தீவு மகேன், திருமதி ராணி சீதரவி, கா.லோகீஸ்வரன் ஆகியோர் ஏற்றுவர். வரவேற்புரையை செல்வி ஆ.யதீந்திரா வழங்குவார்.

தொடர்ந்து சங்கீத பூஷணம் பொன்.குமாரசுவாமியின் பாட்டு, எஸ்.டொமினிக் குழுவினரின் 'கிராமிய இசைத் தென்றல்' எனும் நாட்டார் இசை ஆகியன இடம்பெறும்.

இன்றைய நிகழ்வின் தலைமை உரையை கா.விநாயக சோதி வழங்குவார். கருத்துரையை அ.சண்முகதாஸும் சிறப்பு ரையை திருகோணமலை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் எஸ்.திலக்கும் வழங்குவர். தொடர்ந்து இராமநாதன் நுண் கலைக் கழக சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி கிருஷாந்தி ரவீந்திராவின் தயாரிப்பிலான 'நாட்டியாஞ்சலி'யும், மட்டக்களப்பு கல்வியியற்கல்லூரி மாணவர்கள் வழங்கும் எம்.பி.ரவீந்தி ராவின் தயாரிப்பில் 'நெருப்புக்குள் வாழ்வு', கலைக் கல்லூரி கலைஞர்கள் வழங்கும் எஸ்.பாலாவின் தயாரிப்பில் 'இரத்த நதியில் பூத்த வெள்ளை ரோஜா' என்னும் இரு நாடகங்களும் இடம்பெறும். (ஏ-ரி)

## திருவீதி மான்மியம்

### பொப்பிசை தந்த பக்தி

பித்தா! பித்தா!! பித்தா!!!
பிறை சூடி! சூடி!! சூடி!!!
எத்தா! எத்தா!! எத்தா!!!
என்றும் நினைக்கின்றேன் உனை
வைத்தாய்! வைத்தாய்!! வைத்தாய்!!!
பெண்ணை எங்கே வைத்தாய்?
அத்தா! அத்தா!! அத்தா!!!
என்றும் உனக்கே அடிமை.

பொப்பிசை முதல் பாடலாக
பாடினார் இந்தப் பாட்டை
எப்படி இந்தப் பாட்டை
எங்கு நீர் பெற்றீர் என்றேன்
அப்பனே சுந்தரமூர்த்தி யாரே
அடியார் உமை மறந்தாரில்லை
தப்பாது தண்ணி போட்டால் கூட
தம்பியர் சிவ பக்தர் தானே!

- விகடகவி.

### குரோதம், விரக்தியை அதிகரிக்கும்

# யுத்தம் என்ற வார்த்தையே அடியோடு தேவையில்லை!

### அஸ்கிரிய பீடாதிபதி தெரிவிப்பு; யாழ்.வரவும் ஆவல்

கண்டி,ஏப்.11

"யுத்தம் யுத்தம் என்று அழுத்தம் கொடுப்பதைவிட அந்த வார்த்தையை அடியோடு மறந்து சமாதான முன்னெடுப்புக்களுக் கான சகல முயற்சிகளும் அனைத்துத் தரப்பினராலும் மேற் கொள்ளப்பட வேண்டும், யுத்தத்தின் கொடுமைகளை நாம் அனுபவித்தது போதும்."

- இவ்வாறு கூறினார் அஸ்கிரிய பௌத்த பீடாதிபதி வண. உடுகம ஸ்ரீ புத்தரக்கித்த மகாநாயக்கர்.

கண்டி ஐக்கிய பௌத்த சங்க மண்டபத்தில் இடம்பெற்ற சமாதான முன்னெடுப்புக்கள் தொடர்பான புகைப்படக் கண்காட் சித் திறப்பு வைபவத்தில் கலந்துகொண்டு பேசும் பொழுதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அஸ்கிரிய மகாநாயக்கர் தொடர்ந்து பேசுகையில் கூறியதா வது:-

கடந்த 20 வருடகால யுத்தப் பேரழிவு காரணமாக அப்பாவி மக்களின் உயிர்கள் பலியாகின. நாட்டின் ஒரு பகுதியைச் சேர்ந்தவர்கள் தமது குறிக்கோளை அடையும் பொருட்டு யுத் தத்தைத் தொடங்கினர். இதனால், ஏற்பட்ட விளைவுகள் ஏராளம். பல்வேறு துன்பங்களுக்கும், துயரங்களுக்கும் உள்ளான இத்த கைய மக்களின் வாழ்வு சிதறுண்டு போனது. இதற்கு மத்தியில் நாட்டின் அபிவிருத்தியும் படுபாதாளத்திற்கு இட்டுச் செல்லப்பட்டது.

அவ்வப்போது ஆட்சிக்கு வருபவர்களால் ஏற்படுத்தப்பட்ட நடைமுறைத் திட்டங்களினால் மக்களைப் பாதுகாக்கும் பொருட்டு பல முன்னேற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டன. இந்தப் பாது காப்பு நடவடிக்கைகள் ஒவ்வொரு பகுதி மக்களின் நலன்கருதி மாத்திரம் அல்லாமல் சமாதான முயற்சிக்காகப் பொதுவில் மேற்கொள்ளப்படும் பொழுது உயிர்ப்பலிகளும் மற்றும் அழிவு களும் குறைந்துவிடும்.

யுத்த முன்னெடுப்புக்களினால் அப்பாவி மக்கள் பலியாக்கப் பட்டனர். இதனைத் தடுத்து நிறுத்தும் பொருட்டு சமாதான முயற்சிகளை இந்த அரசு மேற்கொண்டது.

சமாதானப் பேச்சுக்கள் மூலமாகவே பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட வேண்டும். சமாதானத்திற்கு இடப்பட்ட அடித் தளம் பாதுகாக்கப்பட வேண்டும்.

யுத்தம் நடக்க நடக்க, குரோதமும், விரக்தியும், அழிவும் அதிகரிக்கும். எனவே, யுத்தம் என்ற வார்த்தைப் பிரயோகத் தையே நாம் மறந்துவிட வேண்டும்.

இன்றைய அரசு முன்கொண்டு செல்லும் சமாதானத் திட்டங்களுக்கு நாம் எல்லோரும் உதவவேண்டும். குறிப்பாக ஊடகங்கள் இனவாதத் தூண்டல்களுக்குத் துணைபோகக் கூடாது - இவ்வாறு கூறினார் அஸ்கிரிய மகாநாயக்கர்.

அஸ்கிரிய மகாநாயக்கரை செய்தியாளர்கள் சந்தித்து உரையாடிய பொழுது, "யாழ்ப்பாணம் உட்பட கிழக்குப் பிர தேசங்களுக்கும் சென்று, அப்பகுதி மக்களின் தற்போதைய வாழ்க்கை நலம் குறித்து உரையாட விரும்புகிறேன். இதற்கான அழைப்புகள் எனக்குக் கிடைக்குமாயின் அங்கு செல்லத் தயாராக இருக்கிறேன்" - என்று தெரிவித்தார்.

இந்த வைபவத்தில் மத்திய பிரதேச அபிவிருத்தி அமைச்சர் திஸ்ஸ அத்தநாயக்க, அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல, அமைச் சர் லக்கி ஜயவர்த்தன, தியவதன நிலமே, நிரஞ்சன் விஜயரத்ன, மத்திய மாகாணசபைக் கல்வி அமைச்சரின் இணைப் பதிகாரி எம்.துரைசாமி, பிரதி மேயர் ஏ.பீ.அலுவிகார ஆகியோரும் கலந்துகொண்டனர். (எ)

## புதிதாக முகாம்களை படையினர் நிறுவக்கூடாது!

### மதனராஜன் எம்.பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.11

தற்பொழுது குடாநாட்டில் அமைந்துள்ள முகாம்களைத் தவிர வேறெந்த முகாம்களையும் இனிமேல் படையினர் புதி தாக நிறுவக்கூடாது.

- இவ்வாறு தெரிவித்தார் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஈ.பி.டி.பியின் பிரமுகருமான என்.மதனராஜா.

யாழ்.மாநகரசபை வளாகம் மற்றும் கோட்டைப்பகுதி ஆகிய வற்றை உள்ளடக்கிய பிரதேசத்தில் படையினர் முகாம் அமைப் பதற்குக் கடும் எதிர்ப்புக் கிளம்பியதை அடுத்து வேறு ஓர் இடத்தைத் தெரிவுசெய்வது தொடர்பாக நேற்றுமுன்தினம் யாழ். செயலகத்தில் கூட்டப்பட்ட ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொண்ட மதனராஜன் அங்கு, இவ்வாறு தெரிவித்தார்.

புதிதாக முகாம்களை நிறுவக்கூடாது என்று கூறுவது குடாநாட்டில் இராணுவ முகாம்கள் தொடர்ந்து இருப்பதை நாம் விரும்புகிறோம் என்று அர்த்தமல்ல. தற்பொழுது இடம் பெற்று வருகின்ற சமாதானப் பேச்சுக்கள் வெற்றியடைந்து நாட்டில் நிரந்தர சமாதானம் ஏற்பட்டால் இங்கு எந்தவோர் இராணுவ முகாம்களும் தேவையில்லை. ஆனால், முகாம் கள் அமைந்துள்ள பகுதியில் உள்ள மக்களின் இயல்பு வாழ்க கைக்குப் பாதிப்பில்லாதவாறு படையினர் நடந்துகொள்ள வேண்டும். மூடப்பட்டிருக்கும் வீதி களை மக்களின் பாவனைக் குத் திறந்துவிட வேண்டும்.

இதேபோன்று விடுதலைப் புலிகளும் ஏ-9 வீதியால் அனைவரும் சுதந்திரமாகச் சென்றுவருவதற்கு வழிசெய் வதுடன் மக்களிடம் வரி ஏதும் அறவிடக்கூடாது எனவும் அவர் தெரிவித்தார். (ஐ-10-5)

### நாளை

பாங்குனி 29
சனிக்கிழமை
(12.04.2003)
திதி : தசமி
முற்பகல் 11.20 வரை.
நட்சத்திரம்: ஆயிலியம்
பிற்பகல்: 2.46 வரை.
யோகர் சுவாமி குருபூசை
சுபநேரம் : 3.06 -4.36
ராகுகாலம் : 9.06 - 10.36
(பழைய நேரப்படி)

### உதய வாக்கு

தன்னையே ஏமாற்றிக் கொள்பவனே அதிகம் ஏமாற்றப்பட்டவனாவான்.

### பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழான

## சகல தமிழ்க் கைதிகளையும் உடன் விடுதலை செய்க!

### தேசிய மாநாட்டில் ரெலோ கோரிக்கை

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைதுசெய்து சிறைகளில் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகள் மீதான வழக்குகளை வாபஸ் பெற்று அவர்களை அரசு உடனே விடுதலை செய்யவேண்டும்.

நீதி மன்றத்தால் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு இருப்ப வர்களுக்கு ஜனாதிபதி பொது மன்னிப்பு வழங்கி அவர்களை யும் விடுதலை செய்யவேண்டும்.

மேற்கண்டவாறு கோரும் தீர்மானம் கடந்த சனி, ஞாயிறு, திங்கட்கிழமைகளில் மன்னாரில் நடைபெற்ற ரெலோவின் 6 ஆவது தேசிய மாநாட்டில் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

இம்மாதம் 14 ஆம் திகதி வாஷிங்ரனில் நடைபெற இருக்கும் உதவி வழங்கும் நாடுகளின் முன்னோடி மாநாட்டுக்கு அமெரிக்க அரசாங்கம் விடுதலைப் புலிகளையும் அழைக்க வேண்டும்.

அரசுக்கும் புலிகளுக்குமிடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் சரிவர முழுமையாக நடைமுறைப்படுத்தப்படவேண்டும் - என்ற தீர்மானங்கள் உட்பட மற்றும் ஏழு தீர்மானங்களும் மாநாட்டில் நிறைவேற்றப்பட்டன.

ரெலோவின் புதிய நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: செல்வம் அடைக்கல நாதன் எம்.பி., செயலாளர் நாயகம்: இந்திரகுமார் பிரசன்னா, முதல்வர்: ந.ஸ்ரீகாந்தா, பொருளாளர்: நோகராதலிங்கம் வினோ, உபதலைவர்: ஹென்றி மகேந்திரன், துணை முதலவர்: எஸ்.பாஸ்கரன்.

எம்.கே.சிவாஜிலிங்கம் எம்.பி., ரூபராஜ், ரவி, திலகசூரியா உட்பட ஒன்பது பேர் கொண்ட தலைமைக் குழுவும் மாநாட்டில் தெரிவுசெய்யப்பட்டது.

இயக்க யாப்பில் செய்யப்பட்ட மாற்றங்களின்படி, ரெலோவின் தேசிய மாநாடு இனிமேல் வருடந்தோறும் நடைபெறும். தலைமை அலுவலகத்தை கொழும்பிலிருந்து வவுனியாவுககு மாற்றவும், எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தல்களில் கூட்டமைப்பாகப் போட்டி யிடுவதற்கு கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ஏனைய கட்சிகளு டன் பேசுவதற்கும் இணக்கம் காணப்பட்டது. (எ)

# இரண்டாவது பிறந்ததின வாழ்த்து

**11.04.2003**

## செல்வி
## நிவேதிகா சிவபாலலிங்கம்

**அச்சுவேலி நாவலம்பதியைச் சேர்ந்த**
திரு.திருமதி சிவபாலலிங்கம்
தம்பதிகளின் செல்வப் புதல்வி
செல்வி நிவேதிகா

இரண்டாவது பிறந்த தினத்தை இன்று (11.04.2003) வெள்ளிக்கிழமை தனது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார்.

இவரை அப்பா, அம்மா, அம்மப்பா, பிரான்ஸில் உள்ள பெரியம்மா, பெரியப்பா, அண்ணா ஹரீஸ், தம்பி- விதுஷ், சுவிஸில் உள்ள மாமா, அத்தை, அத்தான் சாயிதன் மற்றும் சுன்னாலையில் உள்ள அப்பப்பா, அப்பம்மா, அத்தைமார், சித்தப்பாமார்,

அச்சுவேலியில் உள்ள பாட்டப்பப்பா, பெரியம்மாமாமார், சித்திமார், அக்கா, அண்ணா, அம்மம்மாமார் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் நிவேதிகா குட்டியை காட்டுமலைக் கந்தன் அருளால் பல்கலையும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்க! என வாழ்த்துகின்றனர்.



HAPPY BIRTHDAY

*நாவலம்பதி,*
*அச்சுவேலி.*

(C-27309)

சி.தங்கவேல்
அம்மப்பா

---

# அறிவித்தல்

**சாவகச்சேரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்**
**கூட்டுறவு கிராமியவங்கி மீதிகளை உறுதிப்படுத்தல்**

சாவகச்சேரி ப.நோ.கூ.சங்கத்தில் 01-05-2001 தொடக்கம் 30.04.2002 வரையான நிதியாண்டுக் காலப்பகுதியின் கணக்காய்வு தற்போது நடைபெற்றுக்கொண்டிருப்பதால் இச்சங்கத்தின் கிராமிய வங்கியின் வாடிக்கையாளர்கள் தமது கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் 30-04-2002இல் உள்ள இறுதிமீதியை கிராமிய வங்கியுடன் தொடர்புகொண்டு உறுதிசெய்துகொள்ளவும். மீதியில் வித்தியாசங்கள் காணப்படின் 12-04-2003 ஆம் திகதி தொடக்கம் 30-04-2003 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கிடையில் சனி, ஞாயிறு விடுமுறை நாள்கள் தவிர்ந்த கடமை நேரங்களில் என்னுடன் தொடர்பு கொண்டு சீர்செய்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

*சாவகச்சேரி ப.நோ.கூ. சங்கம்,*
*கண்டி வீதி, சாவகச்சேரி.*
*10.04.2003*

(27301)

சி.சபாரட்ணம்
கணக்காய்வாளர்.

---

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அன்னை மடியில் 1939 - 04 - 24



ஆண்டவன் அடியில் 2003 - 03 - 12

**அமரர் க.துரைசிங்கம் (கண்ணன்)**

*(சுன்னாகம் நூல்நிலையக் காவலாளி)*

திதி: 11.04.2003 நவமி

இன்று (11.04.2003) வெள்ளிக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*டாக்டர் சுப்பிரமணியம் வீதி,*
*கந்தரோடை, சுன்னாகம்.*

(16608)

மனைவி,
மகள், மருமகன்.

---

★ SALE ★ SALE ★ SALE ★ SALE ★ SALE ★ SALE ★ SALE ★ SALE ★

## விற்றுத் தீர்த்தல்

இதோ! 'மாருதி ரெக்ஸ்' இன் விற்றுத் தீர்த்தல

நடவடிக்கையில் - விற்பனையிலுள்ள விலை விவரம்
அனைத்துப் புடைவைகளும் மாபெரும் மலிவு விலையில்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ★ சூட்டிங் - இங்கிலண்ட் | 495 | 300 | ★ செக் பிளவ்ஸ் | [illegible] | 150 |
| ★ சாரம் (No.-1) | 380 | 230 | ★ லேடிஸ் T சேட் | [illegible] | 150 |
| ★ வொக்ஸ் சேட் | 720 | 400 | ★ ஸ்கேட் | [illegible] | 300 |
| ★ இந்தியன் சேட் | 590 | 300 | ★ பஞ்சாபி | 1200 | 600 |
| ★ இந்தியன் சூட் | 780 | 350 | ★ சின்ன பஞ்சாபி | [illegible] | 250 |
| ★ சின்ன சேட் | 580 | 250 | ★ சின்ன கவுண் (இந்தியன்) | [illegible] | 350 |
| ★ சின்ன T சேட் | 435 | 250 | ★ பேபி புரொக் | [illegible] | 250 |
| ★ பினபோம் | 790 | 350 | ★ சாறி | [illegible] | 350 |
| ★ பெரிய கவுண் | 880 | 450 | ★ வேட்டி | [illegible] | 300 |
| ★ பெரிய ஸ்கேட் & பிளவ்ஸ் | 1180 | 650 | ★ சின்ன ரவுசர் | [illegible] | 200 |
| ★ சின்ன ஸ்கேட் & பிளவ்ஸ் | 790 | 400 | ★ பெரிய ரவுசர் (சோக்கோ, டெனிம) | [illegible] | 400 |
| ★ பிளவ்ஸ் | 590 | 350 | ★ பெரிய T சேட் | [illegible] | 300 |
| | | | ★ பெரிய T சேட் | [illegible] | 150 |

**உடனே விரையுங்கள்,**
**கையிருப்பு சொற்பமே**

**மாருதி ரெக்ஸ்**
இல.1, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.

(C/27271)

★ SALE ★ SALE ★ SALE ★ SALE ★ SALE ★ SALE ★ SALE ★ SALE ★

---

# 11 ஆவது ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் மலராய் 12 - 09 - 1967



விண்ணில் மீளாய் 11 - 04 - 1992

**செல்வன்**
## குணரத்தினம் குணராஜ் (குணா)

('யாழ். இந்துக் கல்லூரி பழைய மாணவன்')

குணத்தின் குன்றாய் மிளிர்ந்தவனே – எம்
மனத்தில் நிலையாய் நிலைத்தவனே
துடிப்பாய் எம்முடன் வலம் வந்தாய் – எம்
துடிப்பை அடக்கியே மறைந்திட்டாய்!

வாழ்க்கை என்பது புதிரென்பார் – உன்
மரணம் கூடப் புதிர் தானே – நம்
உரிமைக்காக ஒலித்த குரல்
ஊமையாகிப் போனதேனோ?

விடைகள் இல்லா வினாக்களினை
விட்டு நீயும் சென்றாயோ – உன்
உடலைக் கூடக் காணாது
உடன்பிறப்புக்கள் உளமுருகினவே.

ஆண்டுகள் பதினொரு ஆனாலும்
மீண்டும் உன்னைத் தேடுகிறோம்
குணத்தின் செல்வ மைந்தா நீ
எமை நாடி இங்கு வாராயோ?

(16606)

*'குணா வாசா'*
*இல.84, பொற்பதி வீதி,*
*கொக்குவில் கிழக்கு,*
*கொக்குவில்.*

உன்பிரிவினில்....
அம்மா, அண்ணாமார், அண்ணிமார், அக்கா, அத்தான், தங்கை, மச்சான், மருமக்கள், பெறாமக்கள்.

---

## சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு!

மாபெரும் அதிரடி

மலிவு விற்பனை

பட்டுச்சாறி வகைகள்,
ஸ்கேட் அன் பிளவுஸ்,
சல்வார் கமிஸ்
கவுண் வகைகள்,
பேபி கவுண் வகைகள்

சேட், T.சேட், சூட், கோட் வகைகள், சூட், டெனிம், சோக்கோ ரவுசர் வகைகள், ரவுசர் துணிவகைகள், ஜம்பர் வகைகள்

ரூபா 3000/-க்கு மேல் கொள்வனவு செய்பவர்களில் ஆணுக்கு அழகிய T சேட் ஒன்றும் பெண்ணுக்கு அழகிய பிளவுஸ் ஒன்றும் அன்பளிப்பு

06.04.2003 முதல் 14.04.2003 வரை



**மிலேனியம் பெஷன் அன் பொம்பே பஸார்**

**10, 11, பெரியகடை வீதி**
(மலாயன்கபே முன்பாக),
யாழ்ப்பாணம்.

(நவீன டிசைன்களை உடனுக்குடன் அறிமுகம் செய்பவர்கள்)

(C/27156)

# ஈராக் விவகாரத்தில் சட்டத்தை மதிக்க அமெரிக்காவும், பிரிட்டனும் தவறிவிட்டன!

**மஹிந்த ஹத்தக என்பவர் எழுதி 'லங்கா தீப' நாளிதழில் வெளியான இக்கட்டுரையின் தமிழாக்கத்தின் முதற்பகுதி நேற்றைய உதயனில் பிரசுரமாகியிருந்தது. மிகுதி இங்கு பிரசுரமாகிறது.**

ஈராக்-ஈரான் யுத்தத்தின் போது, ஜனாதிபதி சதாம் ஹூசைனின் இராணுவம் போர்க்கைதிகள் தொடர்பாக சர்வதேச சமூகத்துக்கோ அல்லது சாதாரண மனித தர்ம ரீதியிலோ கௌரவமளிக்கும் வகையில் நடந்து கொள்ளவில்லை. அப்போரில் ஈரானிய இராணுவ வீரர்களைத் தோற்கடிப்பது சிரமமெனத் தெரிந்து கொண்டபோது, ஈராக் ஜனாதிபதி சதாம் ஹூசைனின் அமெரிக்க மற்றும் பிரித்தானியாவிடமிருந்து பெற்ற இரசாயன ஆயுதங்களை எவ்வித இரக்கமும் இன்றி ஈரானிய போர் வீரர்கள் மீது பிரயோகித்தார். அதேபோன்று சர்வதேச விதிமுறைகளுக்கு அமைய ஈரானிய போர்க்கைதிகளுக்கான வசதிகளை அவர் வழங்கத் தவறினார்.

ஆனால், இப்போது இப்போரில் சிறை பிடிக்கப்படும் கைதிகளுக்கு போர்க் கைதிகளுக்கான சகல வசதிகளும் வழங்கப்படுமெனத் தெரிவித்துள்ளமை சிறப்பான விடயமே. ஆயினும், அது தமது பண்பு என்ற ரீதியிலோ அல்லது சர்வதேச சட்டங்களுக்கு மதிப்பளிப்பதாகக் காட்டிக் கொள்ளவோ அல்லாமல், ஒரு புறத்தில் உலக அபிப்பிராயத்துக்கு மதிப்பளிப்பதாகக் காட்டிக்கொள்ளவும் மறுபுறத்தில் இந்த யுத்தத்தில் பின்னடைவைச் சந்திக்க நேர்ந்தால் அதற்கு வேறு மாற்று வழிகளைத் தேடுவதை விடத் தான் அநாதரவான ஒரு நிலையில் இருப்பதான தோற்றத்தை உருவாக்கி உலக அனுதாபத்தைத் தேடும் நோக்கமாகவும் இருக்கலாம். அமெரிக்காவும் சரி, பிரிட்டனும் சரி சர்வதேச சட்டங்களையோ, தீர்மானங்களையோ மதிக்கும் விதத்தில் நடந்துகொள்ளவில்லை. முதலாவதாக ஈராக்குக்கு எதிராக ஆரம்பிக்கப்பட்ட இப்போரில் தற்போது நடைமுறையிலுள்ள சர்வதேச சட்டங்களைப் புறக்கணிக்கும் விதத்தில் ஐ.நா.தீர்மானங்களை மீறுதலாகும். ஐ.நா.தீர்மானத்தின் இரண்டாவது அத்தியாயத்தில் விவரிக்கப்பட்டுள்ள வகையில் எந்தவொரு நாடும் தமது பாதுகாப்புக்கு பாரதூரமான அச்சுறுத்தல் உருவாகும் சந்தர்ப்பத்தில் மட்டுமே மற்றொரு நாட்டின் மீது போர் நடவடிக்கை எடுக்கமுடியுமெனக் கூறப்பட்டுள்ளது. தொடர்ச்சியாக பிறிதொரு நாட்டின் மீது இராணுவ நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியிருப்பின், அது ஐநா பாதுகாப்புச் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் ஒன்றின் மூலமே அவ்வாறு நடவடிக்கையை மேற்கொள்ள முடியும். அமெரிக்காவும் பிரிட்டனும் ஐ.நா.பாதுகாப்புச் சபையில் தீர்மானமொன்றினை சமர்ப்பித்து அதை நிறைவேற்றிக் கொள்ளாமலேயே இந்த யுத்தத்தை ஆரம்பித்துள்ளன. ஐ.நா. பாதுகாப்புச் சபையின் 1441ஆவது தீர்மானத்தை மீறி ஈராக் செயற்படுவதால், அந்நாட்டுக்கெதிராக யுத்தம் மேற்கொள்ள அனுமதிக்குமாறு கோரும் தீர்மானத்தை நிறைவேற்றிக் கொள்வதற்கு பலவிதத்தில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதும், அது சாத்தியப்படாமையால் அம்முயற்சியை அமெரிக்காவும் பிரிட்டனும் கைவிட நேர்ந்தது. ஐ.நா. பாதுகாப்புச் சபையின் 1441ஆவது தீர்மானத்தின் படி ஐ.நா.சபையால் நியமிக்கப்பட்ட ஆயுதப் பரிசோதனைக் குழு ஈராக் நாட்டில் மேற்கொண்ட பரிசோதனைகளை பூர்த்திசெய்ய மேலும் கால அவகாசம் வழங்கப்பட வேண்டுமென்பது ஐ.நா.பாதுகாப்புச் சபையின் பெரும்பான்மை அங்கத்தவர்களின் கருத்தாக அமைந்த போதிலும், அமெரிக்காவும் பிரிட்டனும் அதனை ஒப்புக்கொள்ளத் தயாராயிருக்கவில்லை. இரண்டாவதாக ஈராக் நாடு, அமெரிக்காவினதோ அல்லது பிரிட்டனதோ பாதுகாப்புக்குப் பெரும் அச்சுறுத்தலாய் உள்ளதா எனப் பரிசீலிப்பதற்கான நியாயமான காரணங்களைச் சமர்ப்பிக்க ஜனாதிபதி புஷ்ஷோ, பிரதமர் ரொனி பிளயரோ தவறிவிட்டனர். இதனால், மனித சமுதாயத்துக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் உயிரியல் மற்றும் இரசாயன ஆயுதங்களை ஈராக் தன்வசம் வைத்திருப்பதாக அமெரிக்கா குற்றஞ்சாட்டியது. மனித இனத்துக்கே கேடு விளைவிக்கும் வகையிலான உயிரியல், இரசாயன ஆயுதங்களைத் தயாரிப்பதோ, பாவிக்க முயல்வதோ மனித இனத்தையே அச்சுறுத்தும் நடவடிக்கையாகும். ஆனால், ஐ.நா.சபையின் ஆயுதப் பரிசோதனைக் குழுவினாலோ அல்லது அமெரிக்க உளவுத்துறையாலோ இக்குற்றச்சாட்டை நிரூபிக்கும் வகையில் தேவையான ஆதாரங்களைச் சமர்ப்பிக்க முடியவில்லை. 1998இல் இடைநிறுத்தப்பட்ட ஆயுதப் பரிசோதனைக் குழுவாலோ, இத்தடவை நியமிக்கப்பட்ட ஆயுதப் பரிசோதனைக் குழுவாலோ அவ்வாறான ஆயுதங்கள் ஈராக் வசம் உள்ளதாக உறுதிசெய்ய முடியாத நிலையில் அவ்வித ஆயுதங்களை ஈராக் தன்வசம் வைத்துள்ளது என்று குற்றஞ்சுமத்திப் போரை முன்னெடுப்பதை நியாயமாகக் கொள்ள முடியாது. முதற்தடவையான ஆயுதப் பரிசோதனையின் போது ஈராக் அக்குழுவுக்கு நியாயமான ஒத்துழைப்பு வழங்காத போதும், இத்தடவை அந்நிலை ஏற்படவில்லை. ஆகவே, சர்வதேச விதிமுறைகளை மீறி யுத்தத்தை ஆரம்பித்த அமெரிக்காவும் பிரிட்டனும் ஈராக் நாடு அவ்விதிமுறைகளுக்கமைய நடந்து கொள்ளவேண்டுமென வற்புறுத்துவதை நியாயப்படுத்தமுடியாத நிபந்தனைகள் என்று கருதப்படமுடியும். ஆனால், நியாயப்படுத்த முடியாத காரணங்களால் ஆரம்பிக்கப்பட்ட யுத்தத்தில் யுத்தம் தொடர்பாகக் கடைப்பிடிக்கப்படவேண்டிய ஒழுங்கு முறைக்கமையவும், சர்வதேச சட்ட திட்டங்களுக்கமையவும் நடந்து கொள்ள வேண்டுமென முழு உலகமும் எதிர்பார்க்கிறது.

அமெரிக்கா தலைமையிலான மேற்குலக நாடுகள் ஆப்கானில் தலிபான் ஆட்சிக்கெதிராக ஐ.நா.பாதுகாப்புச் சபையின் அனுமதியோடு மேற்கொண்ட யுத்தத்தில், கைது செய்யப்பட்ட போர்க் கைதிகள் விடயத்தில் சர்வதேச சட்ட திட்டங்களுக்கமைய நடந்து கொள்ளவில்லை. 1949ஆம் ஆண்டின் மூன்றாவது ஜெனீவா உடன்படிக்கையின் 118ஆம் இலக்க சரத்தின் படி போர் நடவடிக்கைகள் முடிவடைந்த பின்பு தாமதமின்றி உடனடியாக சிறைப்பிடிக்கப்பட்ட யுத்தக்கைதிகளை விடுவித்து அவரவர் நாடுகளுக்கு அனுப்பி வைக்கவேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. 1977ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட முதலாவது மேலதிக இணைப்பின் படி இந்த ஒப்பந்தத்தில் இவ்விடயம் மீண்டும் வலியுறுத்தப்பட்டுள்ளதுடன், அதில் குறிப்பிடப்பட்ட விதத்தில் நடவடிக்கை மேற்கொள்ளாத பட்சத்தில் அவ்விடயம் சர்வதேச நீதிமன்றத்துக்கு எடுத்துச் செல்லப்படத்தக்க நடைமுறை மீறலாகும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த வகையில் போர்க்கைதிகளை வேறொரு நாட்டுக்குக்கொண்டு செல்லல் தடுக்கப்படுகிறது. போரில் ஈடுபட்ட நாடுகளிடையே சட்டபூர்வமான போர் நிறுத்தமோ அல்லது சமாதான உடன்படிக்கையோ மேற்கொள்ளப்படாவிட்டாலும், போர் முடிவுற்ற வேளையில் போர்க்கைதிகளை அவர்களது நாடு தவிர்ந்த பிறிதொரு நாட்டுக்கு கொண்டுசெல்ல முடியாதெனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த ஜெனீவா ஒப்பந்தத்தில் மற்ற நாடுகளைப் போன்றே அமெரிக்கா மற்றும் ஈராக் ஆகிய நாடுகளும் கையொப்பம் இட்டுள்ளன. ஆனால், ஆப்கானிஸ்தானில் தற்போது போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட நிலையிலும், அமெரிக்கா தான் கைது செய்த ஆப்கான் இராணுவ வீரர்களை போர்க்கைதிகள் என்ற விதத்தில் கருதவோ அல்லது விடுதலை செய்யவோ இதுவரையில் எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை. அதற்கு மேலாக, அப்போர்க் கைதிகளை அமெரிக்க விமானப்படை முகாமில் தடுத்து வைத்திருப்பது சர்வதேச விதிமுறைகளை மீறும் நடவடிக்கையாகும். இந்த வகையில், அமெரிக்கா, ஆப்கான் யுத்தக் கைதிகளைப் பேணும் விதத்தில், ஈராக் நாடும் தற்போது அமெரிக்க யுத்தக் கைதிகளைப் பேண வேண்டுமென்பது கருத்தல்ல. ஆனால், வரையறைகளை மீறாத வகையில் சட்டம் நடைமுறைப்படுத்தப்படவேண்டுமென்பதே முழு உலகமும் எதிர்பார்க்கும் அடிப்படை மனித தர்மம் ஆகுமென்பதை குறிப்பிட்டாக வேண்டும்.

ஈராக் தன்வசம் மறைத்து வைத்திருப்பதாக கூறப்படும் இரசாயன மற்றும் அதி சக்தி வாய்ந்த ஆயுதங்கள் தொடர்பான பரிசோதனைகள் சரியான முறையில் இடம்பெற்றதாக இதுவரை கூறமுடியவில்லை. யுத்தம் ஆரம்பித்து இரு வாரங்கள் கடந்த நிலையிலும் ஈராக் இதுவரை குறிப்பிட்ட அவ்வித ஆயுதப் பிரயோகம் எதனையும் மேற்கொள்ளவில்லை. தலைநகர் பக்தாத்துக்கு அண்மையில் எதிரிகள் வந்துவிட்ட நிலையிலும், அவ்வகை இரசாயன ஆயுதத் தாக்கல் எதிலும் ஈராக் ஈடுபடாதது, ஒருவேளை அவ்வித ஆயுதப் பிரயோக மூலம் உலக அபிப்பிராயத்தை - அனுதாபத்தை - இழக்க நேரிடலாம் என சதாம் ஹூசைன் கருதுவதாகவும் இருக்கக்கூடும். அல்லது உண்மையில் ஈராக் வசம் அவ்வித ஆயுதங்கள் எதுவும் இல்லை என்பதாயும் இருக்கலாம். பல காரணங்களால் பின்னர் கூறப்பட்ட விடயமே - அதாவது, ஈராக் வசம் இரசாயன ஆயுதங்கள் எதுவும் இல்லை - என்பதே சரியாய் இருக்கலாம். கடந்த வாரம் வெளிவந்த அறிக்கைகளின்படி, ஈராக்கின் 'நயாவ்' நகரத்திற்கு அண்மையில் இரசாயன ஆயுதத் தயாரிப்பு தொழிற்சாலை எனச் சந்தேகிக்கப்படும் கட்டமும் மேற்கு ஈராக்கின் இடமொன்றிலிருந்து இரசாயன ஆயுத உற்பத்தி தொடர்பானவை எனச் சந்தேகிக்கப்படும் ஆவணங்களும் அமெரிக்க இராணுவத்தினரால் கண்டுபிடிக்கப்பட்டன.

அவ்வாறே கைதுசெய்யப்பட்ட இரு ஈராக்கிய இராணுவ ஜெனரல்களிடமிருந்து இரசாயன ஆயுதத் தயாரிப்புத் தொடர்பாக விசாரணை மேற்கொள்ளப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் அமெரிக்க மற்றும் பிரித்தானிய இராணுவத்தால் ஈராக் வசம் இருப்பதாகக் கூறப்படும் இரசாயன ஆயுதங்கள் மற்றும் குண்டுகள் எவற்றையாவது கண்டுபிடிக்க முடியாவிட்டால் இந்த யுத்தத்துக்கான காரணம் பிசுபிசுத்துவிடும்.

இந்த நிலைமையில் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஸ் புஷ்ஷிற்கும், பிரித்தானியப் பிரதமர் ரொனி பிளயருக்கும் சதாம் ஹூசைனது குரூர ஏதேச்சாதிகார ஆட்சியை மாற்றி உருவாக்குவதன் மூலம் ஈராக்கிய மக்களுக்கு விடுதலை பெற்று கொடுப்பதான நடவடிக்கையாக மட்டுமே இந்த யுத்தத்தை நியாயப்படுத்த முடியும். ஆனால், ஆப்கான் விடயத்தில் அமெரிக்காவின் மத்தியஸ்தம் எதிர்பார்த்தபடி பலனளிக்கத் தவறியதை நோக்கும் போது ஈராக் விடயத்தில் அவ்வாறான எதிர்பார்ப்பை உருவாக்குவது கடினமாகும். ஆப்கானில் ஆட்சியாளர் ஹமீட் ஹர்சேயின் அரசுக்கு சம்பிரதாய தலைவர்களின் மகாநாடான லொயாஜிர்காவின் அனுமதி கிடைக்காத போதும், பொதுமக்களின் ஆதரவு கிட்டியுள்ளதாக தற்போதும் கருதமுடியாதுள்ளது. அமெரிக்க மற்றும் ஜேர்மன் படையினரின் கடும் பாதுகாப்பின்கீழ் காபூல் நகரத்தில் தங்கியிருக்கும் ஹர்சேயிக்கு, காபூலுக்கு வெளியில் தற்போதும் பாதுகாப்பு இருப்பதாகக் கருத முடியவில்லை. அரச நிர்வாகம் நலிவுற்ற நிலையில் இருப்பதால் மாகாணப் பகுதிகளில் மீண்டும் கிளர்ச்சிக் குழுக்களின் ஆதிக்கம் உறுதியான நிலையில் உள்ளது. நாட்டின் வட பகுதி தற்போதும் பெரும்பாலும் தத்தமது சட்டதிட்டங்களின்படியும் தமது தேவைகளின்படியுமே நிர்வகிக்கப்பட்டு வருகிறது. பொதுமக்களுக்கு பதிலளிக்கக்கூடிய ஜனநாயக அரசியல் நிர்வாக முறை தற்போதும் எதிர்பார்ப்புடன் கூடிய விடயமாகவே உள்ளது. அதேபோன்று பக்தாத் நகரில் சதாம் ஹூசைனினது ஏதேச்சாதிகார நிர்வாக முறை அகற்றப்பட்டபின் ஆப்கானில் இடம்பெற்றது போன்ற நிலையே ஏற்படலாம். ஈராக்கின் வடபகுதியில் வதியும் குர்தி இன மக்களின் எதிர்பார்ப்புக்களையும் 'குர்தி' இனத் தலைவர்களிடையே இடம்பெறக் கூடிய அதிகார மோதல்களையும் அமெரிக்காவே தீர்த்து வைக்க வேண்டி ஏற்படலாம். ஈராக்கினுள் இடம்பெறும் ஷியா மற்றும் சுன்னி பிரிவினர்களிடையேயான பேதங்கள் வளர்ச்சியுறுமானால், சதாம் ஹூசையினது நிர்வாகம் நலிவடைந்ததன் காரணமாகத் தோன்றும் மோதல்களுக்குத் தீர்வு காண்பதைவிட மேலதிகமான புதிய மோதல்கள் உருவாவதற்குப் பெரும்பாலும் வாய்ப்புக்கள் இருப்பதாகத் தோன்றுகிறது.

**தமிழில்:-வியெஸ்ரி**

இந்த ஈராக் யுத்தம் காரணமாக பாதிப்புக்குட்பட்ட மற்றொரு தரப்பு ஐ.நா. அமைப்பாகும். உலகத்தில் யுத்தம் ஏற்படாது தடுக்கவும், சமாதானத்தை நிலை நிறுத்தவும் என உருவாக்கப்பட்ட இந்த அமைப்பு பலம் வாய்ந்த வல்லரசொன்றின் விருப்பத்தை நிறைவேற்றும் வகையில் செயற்படுவது அதன் அடிப்படை நோக்கத்தையும், பொறுப்பையும் கேலிக்குரியதாக்குகின்றது. உலகத்திலுள்ள மூத்த சிவில் அதிகாரி போன்ற ஐ.நா.சபை செயலாளர் நாயகம் சிக்கலான சந்தர்ப்பத்தில் செல்லாக்காசு போன்று கணிக்கப்படுவதைத் தடுக்கும் திறன் பலமற்ற எந்த அரசுக்கோ, சமூகத்துக்கோ இல்லை. ஐ.நா.சபையின் செயலாளர் நாயகம் பதவியை வகித்தது போன்றே, அதன் கொள்கையை நிலை நிறுத்தும் பணியில் தன் உயிரையும் பறிகொடுத்த டாக் ஹமர்சீல்ட் அவர்களின் பிரபல வார்த்தைகள் போன்று ஐ.நா.சபைக்கு தனது அதிகாரத்தை நிலை நிறுத்தவோ, அபாயத்தை விலக்கிக்கொள்ளவோ திறன்கிடையாது. எதிர்பார்ப்புகளுடன் காத்திருப்பதே ஐ.நா. சபையால் தற்போது செய்யக் கூடிய தொன்றாகும். எனவே கடந்த மார்ச் மாதம் 21ஆம் திகதி ஐ.நா. சபையின் ஒரு யுகம் முடிவடைந்ததாக வரலாற்றுப் புத்தகத்தில் பதிவு செய்யப்படும். ◆

# கண்டி வீதியின் புனரமைப்பு திருப்திகரமானதாக இல்லை

## உலக வங்கி கவலை தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.11

யாழ்.கண்டி வீதி புனரமைப்புக் குறித்து எந்த வகையிலும் திருப்தி காணமுடியாத நிலை உள்ளது என்று ஆசிய அபிவிருத்தி வங்கி தெரிவித்துள்ளது.

ஏ-9 வீதியின் புனரமைப்புக்கென ஆசிய அபிவிருத்தி வங்கி 60கோடி ரூபாவை வழங்கியிருந்தது. இந்த வேலைகள் எதிர்வரும் டிசெம்பர் மாதம் பூர்த்தியாக வேண்டும். ஆனால், அதற்கான அறிகுறிகள் எதுவும் தென்படவில்லை எனக் கூறி ஆசிய அபிவிருத்தி வங்கி கவலை தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாக கடந்த திங்களன்று வவுனியா அரச அதிபர் அலுவலகத்தில் கலந்தாலோசிக்கப்பட்டபோதே இந்தக் கருத்தினை ஆசிய அபிவிருத்தி வங்கியினர் தெரிவித்துள்ளனர்.

வீதிப் புனரமைப்புக்கென கொண்டு செல்லப்படும் கருங்கற்கள் ஓமந்தைச் சோதனைச் சாவடியில் இறக்கி ஏற்றப்படுவதால் மேலதிக செலவு ஏற்படுவதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

### 10 நீதிவான்களுக்கு பதவியுயர்வு

நீதிச் சேவை ஆணைக்குழுவினால் மாவட்ட, நீதிவான்கள் 10 பேருக்குப் பதவி உயர்வு வழங்கப்பட்டிருக்கிறது. இவர்கள் அனைவரும் விசேட தரத்துக்கு உயர்த்தப்பட்டுள்ளனர்.

திருகோணமலை மாவட்ட நீதிவான் ஈ.ரி.ஏ.பாலசிங்கம், பூகொட மாவட்ட நீதிவான் எஸ்.எம்.ஏ.கபூர் ஆகியோரும் இவர்களில் அடங்குவர்.

மாத்தளை மாவட்ட நீதிவான் எச்.சி.ஜே.மடவல, கல்கிசை மாவட்ட நீதிவான் பி.ஆர்.வல்கம, கண்டி மாவட்ட நீதிவான் ஜே.எம்.அபேரத்ன, அவிசாவளை மேலதிக மாவட்ட நீதிவான் பி.கே.பீ.வி.பி.பண்டார, கம்பஹா மாவட்ட நீதிவான் எம்.பி.யூ தென்னக்கோன், காலி மாவட்ட நீதிவான், சி.ராஜபக்ஷ, கொழும்பு மேலதிக மாவட்ட நீதிவான எஸ்.எம்.என்.சமரக்கோன், நீர்கொழும்பு மாவட்ட நீதிவான் எல்.ரி.பி. தெஹிதெனியா ஆகியோர் பதவி உயர்வு பெற்ற ஏனைய நீதிவான்களாவர்.

# மணல் அகழ்வு குறித்த பிணக்கில் வீடொன்று நொறுக்கப்பட்டது!

## கொழும்புத்துறையில் சம்பவம்

நெடுங்குளம் பகுதியில் மணல் அகழ்வு தொடர்பாக ஏற்பட்ட பிணக்கு அடிதடி மோதலாக உருவெடுத்தது.

இதில் வீடொன்று அடித்து நொறுக்கப்பட்டது. இச்சம்பவம் கடந்த செவ்வாய் இரவு கொழும்புத்துறை கிழக்கில் இடம்பெற்றுள்ளது.

வாள்கள், பொல்லுகள் சகிதம் வந்த ஒரு கோஷ்டியே டிராக்டர் சாரதி ஒருவரது வீட்டையே சேதப்படுத்தியது. வீட்டு உரிமையாளர் இது தொடர்பாக பொலீஸில் முறைப்பாடு செய்தமையடுத்து அப்பகுதிக்கு வந்த பொலீஸார் இருவரைக் கைதுசெய்து சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அண்மைக்காலமாக கொழும்புத்துறை, அரியாலைப் பகுதிகளில் சட்டவிரோதமாக மணல் அகழ்வு நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (ஓ-30)

# துர்நடத்தைக் கும்பலுக்கு அறிவுரை கூறியவர் மீது தாக்கு!

## நாவற்குழியில் சம்பவம்

கைதடி,ஏப்.11

ஆள்களற்ற வீட்டில் துர்நடத்தையில் ஈடுபட்டிருந்த யுவதிக்கும் மூன்று நபர்களுக்கும் அறிவுரை கூறமுயன்ற ஒருவர் அவர்களால் தாக்கப்பட்டார்.

இச்சம்பவம் அண்மையில் நாவற்குழிச் சந்திக்கருகில் உள்ள வீடொன்றில் இடம்பெற்றுள்ளது. துர்நடத்தைக் கும்பல் தாக்கியதில் மேற்படி நபர் காயமடைந்தார்.

இச்சம்பவத்தில் நாவற்குழி சந்தியைச் சேர்ந்த ஐயாங்கன் மார்க்கண்டு (வயது63) என்பவரே வலது கையிலும், முதுகிலும் படுகாயமடைந்தவராவார்.

மேற்படி துர்நடத்தையில் ஈடுபட்ட யுவதி குருநகரைச் சேர்ந்தவர் எனவும், மற்றைய நபர்கள் நாவற்குழியைச் சேர்ந்தவர்கள் எனவும் கூறப்படுகின்றது. (ஓ-75)

**சேதமடைந்த வீட்டை திருத்துவதற்காக**

# கொழும்பிலிருந்து வந்தவர் நகைகளை பறிகொடுத்தார்

தென்மராட்சி,ஏப்.11

கொழும்பிலிருந்து வந்து, உறவினர் வீட்டில் தங்கியிருந்த பெண்ணின் தாலிக்கொடி, பணம் உட்பட பெறுமதியான பொருள்கள் திருடர்களால் சூறையாடப்பட்டன. இச்சம்பவம் கடந்த சனிக்கிழமை நள்ளிரவு, சாவகச்சேரி கல்வயல் சண்முகானந்தா வீதியில் இடம்பெற்றது.

மேற்படி வீதியிலுள்ள தனது வீட்டினை புனரமைக்கவென கொழும்பிலிருந்து வந்த பிரஸ்தாப பெண் தங்கியிருந்த வீட்டின் கூரையைப் பிரித்து உள்ளிறங்கிய திருடர்கள் சூட்கேஸ் மற்றும் கைப்பை ஆகியவற்றினுளிருந்த 10 பவுண் நிறையுடைய தாலிக்கொடி, பணம் என்பவற்றைத் திருடியுள்ளனர்.

வீட்டுக்காரர் படுத்திருந்த அறையினுள் செல்ல முற்பட்ட வேளையில் வீட்டுக்காரர் எழுந்து கூக்குரலிடவே திருடர்கள் தப்பி ஓடிவிட்டனர். இச்சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-117)

## இரண்டாவது பிறந்தநாள் வாழ்த்து

HAPPY BIRTHDAY



### செல்வன் பத்மநாதன் நர்மதன்

பத்மநாதன் - விமலகேசினி தம்பதிகளின்

**செல்வப் புதல்வன் நர்மதன்**

தனது இரண்டாவது பிறந்தநாளை இன்று (11.04.2003) வெள்ளிக்கிழமை தமது இல்லத்தில் குதூகலமாகக் கொண்டாடுகிறார். அவரை வெள்ளை மாவடிப் பிள்ளையார் அருள் பெற்று பல்கலையும் கற்றுப் பல்லாண்டு காலம் வாழ்க என அப்பா, அம்மா, அம்மப்பா, அப்பம்மா, மாமாமார், அத்தை, பெரியப்பா, பெரியம்மா, அண்ணாமார், அக்கா, சித்திமார் மற்றும் உறவினர்களும் வாழ்த்துகின்றார்கள்.

*சங்கத்தானை, சாவகச்சேரி.* (16601) க.பிரியதர்ஷன் (மாமா)


## MATHS CENTRE
M.M.V.Road - Nelliady

AL-2005 புதிய கலைப் பிரிவு

ஆரம்பம்: 12.04.2003 சனி

Logic - 3.15 p.m. (ப.நே.) (16548)



## ஆலயப் பணியாளர் தேவை

சைவ ஆசாரமுள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்

வயது - கல்வித்தராதரம் - பண்பாடு

இவற்றுக்கு தகுதியான நற்சான்றுப்பத்திரம் தேவை.

குடும்பப் பொறுப்பற்றவர்களாயின் விரும்பத்தக்கது.

அனுப்பும் விலாசம்:- - பரிபாலனசபை.

நிறைவேற்று அலுவலர்

ஸ்ரீ நாகவரதநாராயணர் தேவஸ்தானம்,

அளவெட்டி. (C/27310)


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தாயின் மடியில் 04 - 02 - 1934



தாயக மண்ணில் 12 - 03 - 2003

### திருமதி கதிரவேலு பத்மாவதி

(யோகாம்பிகை)

சுருவிலைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் சுண்டுக்குளியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி கதிர்வேலு பத்மாவதி அவர்களின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் அனுதாபச்செய்தி அனுப்பியவர்களுக்கும் எமது துயரினைப் பகிர்ந்து கொண்ட அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றி யைத் தெரிவிக்கின்றோம்.

இன்று (11-04-2003) வெள்ளிக்கிழமை நடைபெறுகின்ற அன்னாரது அந்தியேட்டிக் கிரியைகளிலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இல.55, கொழும்புத்துறை வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். (16635) பிரிவால் துயருறும்: குடும்பத்தினர்

## புகையிலை அறுவடை ஆரம்பம்

வடமராட்சி,ஏப்.11

வடமராட்சிப் பிரதேசத்தில் புகையிலை அறுவடை வேகமாக நடைபெற்று வருகின்றது. அறுவடை செய்யப்பட்ட புகையிலை மரம் ஒன்று சில வாரங்களுக்கு முன்னர் 90ரூபா முதல் 100ரூபா வரை விற்பனையாகி வந்தது. தற்போது ஒரு புகையிலை மரம் 60ரூபாவாக விற்பனையாகிறது. புகையிலையை உலர்த்திப் பதப்படுத்தி விற்பனை செய்வோர் புகையிலை மரங்களைக் கொள்வனவு செய்வதில் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர்.

வடமராட்சிப் பிரதேசத்தில் கரணவாய், கம்பர்மலை, கொம்மாந்துறை, மந்திகை ஆகிய இடங்களில் அதிகளவில் புகையிலைப்பயிர் செய்கை பண்ணப்பட்டுள்ளது. (ஒ-173)

## சஞ்சிகை வெளியீடு

யாழ்ப்பாணம்,ஏப்.11

யாழ்.உயர்தொழில் நுட்ப நிறுவனத்தின் ஆங்கில தேசிய டிப்ளோமா மாணவர்களால் வெளியிடப்பட்டுவரும் 'எக்கோ'(Echo) வருடாந்த சஞ்சிகையின் இரண்டாவது இதழ் வெளியீட்டு விழா இன்று காலை 10மணிக்கு நிறுவனத்தின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக நிறுவனத்தின் பணிப்பாளர் ரி. ராஜரட்ணம் கலந்துகொள்வார்.(ஒ-4)

## பாம்புக் கடிக்கு குடும்பப் பெண் இலக்கானார்!

கைதடி,ஏப்.11

தனது தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருந்த பெண்ணொருவர் நாக பாம்பில் கடியுண்ட சம்பவம் கடந்த வாரம் கைதடி குமர நகரில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் நான்கு பிள்ளைகளின் தாயாரான திருமதி சுப்பிரமணியம் வசந்தா (வயது30) என்பவரே பாம்பினால் கடியுண்டு சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவராவார். (ஒ-75)

## நூல் நிலைய பணிநேரம் அதிகரிப்பு

நல்லூர் பிரதேச சபைக்கு உட்பட்ட நூல் நிலையங்கள் திறந்திருக்கும் நேரம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

நல்லூர் பிரதேச சபையின் கொக்குவில் உப அலுவலகத்திலும் கோண்டாவில் வாகீஸ்வரி சனசமூக நிலையத்திலும் திருநெல்வேலி கலாசாலையிலும் நூல் நிலையங்கள் அமைந்துள்ளன.

இந்த நூல் நிலையங்களில் திங்கட்கிழமை மற்றும் பொது விடுமுறை தினங்களில் பத்திரிகை படிக்கும் பகுதி, உசாத்துணைப் பகுதி ஆகியவை மட்டும் காலை 9மணி முதல் பிற்பகல் 4.30மணி வரையிலும் திறந்திருக்குமென்றும் -

ஏனைய தினங்களில் நூல் நிலையங்களின் சகல பகுதிகளும் காலை 9மணிமுதல் மாலை 7மணிவரையிலும் திறந்திருக்குமென்றும்- அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-69)

## அடையாள அட்டை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம்,ஏப்.11

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் மீளக்குடியமர்ந்தவர்களில் தேசிய அடையாள அட்டை இல்லாதவர்கள் அடையாள அட்டையைப் பெறுவதற்காக பிறப்பு, இறப்பு சம்பந்தமான சகல விவரங்களையும் தத்தம் கிராம அலுவலர்களிடம் உடன் சமர்ப்பிக்குமாறு பிரதேச செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

சமர்ப்பிக்கப்பட்ட விவரங்கள் அனைத்தும் பிரதேச செயலக அதிகாரிகளினால் ஆராயப்பட்டு நடமாடும் செயலக சேவை மூலம் இப்பிரச்சினைக்கு சுமுகமாகத் தீர்வினைப் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (க-180)


## தேவை

வெல்டிங் வேலை, கம்மாலை வேலை தெரிந்தவர்கள் உடன் தேவை.

தொடர்பு: (16595)

M.T.K.வேக் சொப்

40, நக்கா றோட், யாழ்ப்பாணம்.

(I.C.R.C.முன்பாக)


## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

HAPPY BIRTHDAY



### செல்வி அன்ரனி சகிலா

அன்ரனி எட்வேட் செல்வறஜினி தம்பதிகளின்

**செல்வப் புதல்வி அ.சகிலா**

தனது முதலாவது பிறந்த தினத்தை லண்டனில் இன்று (11.04.2003) வெள்ளிக்கிழமை தனது தாய், தந்தையருடன் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகிறார். இவரை யாழ்ப்பாணத்தில் இருக்கும் அம்மப்பா, அம்மம்மா, அன்ரிமார், மாமாமார், ஜேர்மனியில் இருக்கும் பெரிய மாமா, எமிலியானுஸ் (பட்டு) மேரி கல்பனா (அத்தை), லண்டனில் இருக்கும் அலோசியஸ் ஜெகன் (சின்ன மாமா), பருத்தித்துறையில் இருக்கும் அப்பப்பா, அப்பம்மா, மாமிமார், மாமாமார், மச்சான்மார், மச்சாள்மார், லண்டனில் இருக்கும் மாமிமார், மாமாமார், மச்சான்மார், மச்சாள்மார் மற்றும் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் குழந்தை யேசுவின் அருளால் பல்கலையும் பெற்று நீடூழி வாழ்க வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

*இல.159, குருசோ வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்* (16504) அ.க.புஸ்பராசா (அம்மப்பா)


## மாபெரும் மலிவு விற்பனை

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு

இம் மலிவு விற்பனை ஈஸ்ரர் பண்டிகை (20-04-2003) வரை நீடிக்கப்பட்டுள்ளது

சகல வகையான புடவைகளையும்

விசேட விலைக்கழிவில் பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்

### நைஸ் புடவை நிலையம்

410, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P. : 222 2381

(C/27173)


## வரணி சிட்டி வேரம் கண்ணகை அம்மன் ஆலய விழா உபயகாரர் ஆலோசனைக் கூட்டம்

காலம் :- 2003-04-12 சனிக்கிழமை

இடம் :- மேற்படி ஆலய மண்டபம்

நேரம் :- பிற்பகல் 1மணி 30நிமிடம்

முக்கிய கவனிப்பு:- திருவிழாக்களின் சங்கற்பகாரர்கள் தவறாது சமுகந்தருவும்.

தகவல் கொடுப்பவர்:

(16400) தற்போதுள்ள மேற்படி ஆலய தர்மகர்த்தா.

## ஈரவிழிகளுடன் ஈராண்டு இதய அஞ்சலி

மலர்வு 20 - 10 - 1929



உதிர்வு 03 - 04 - 2001

### அமரர் முருகுப்பிள்ளை நாகலிங்கம்

(இளைப்பாறிய அதிபர்)

தசமிதிதி - 11.04.2003

அன்புத் தெய்வமே, ஐயாவே!
நீங்கள் சென்று இரண்டாண்டாச்சோ
மறக்க முடியவில்லை எம்மால்.
நீங்கள் மறைந்து போனாலும் உங்கள்
நினைவுகள் எங்கள் நெஞ்சங்களை விட்டு
ஒருபோதும் மறையாது.

எம் உயிரோடு கலந்து விட்ட எம் அன்புத்தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல வீரபத்திரப் பெருமானையும் செல்வச் சந்நிதி முருகனையும் பிரார்த்திக்கின்றோம்.

*'கலாபவனம்' வீரபத்திர் கோவிலடி, உடுப்பிட்டி.*

உங்கள் பிரிவால் துயருறும் மனைவி, பிள்ளைகள், (16621) மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# இதோ இன்று முதல் யாழ் மக்களுக்கு சன்குவிக் பழரசம்

பல்வகை பழங்களினால் அவற்றின் தரச் சுவைக்கேற்ப
தயாரிக்கப்பட்டுள்ள இச் சன்குவிக் பழரசம் இன்று முதல் உங்கள் மண்ணில்.




sunquick அதிக பழங்கள் அதிக கோப்பைகள்

## சின்னஞ்சிறு விளம்பரம்

### கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான Prima Broiler குஞ்சுகள், அதிவிசேட Prima முட்டைக் குஞ்சுகள் விற்பனைக்குண்டு. (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (16542)

### தவறிவிட்டது

160A, பழைய பூங்கா வீதி, சுண்டுக்குளியைச் சேர்ந்த T.தவச்செல்வன் என்பவருடைய பயணப் பை முக்கிய பொருள்களுடன் 08-04-2003 அன்று முகமாலை சோதனைச் சாவடி பகுதியில் தவறிவிட்டது. தவறுதலாக எடுத்துச்சென்றவர் தயவுசெய்து மேற குறிப்பிட்ட முகவரியில் கொடுத்து தவவும். சன்மானம் வழங்கப்படும். T.P.01-581092, 0777-636452. (16634)

### யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தவத்திரு. சிவானந்தி அடிகள் லண்டனில் காலமானார்

உலக சைவப் பேரவையின் தலைவரும், மெய்கண்டான் ஆதீனத்தின் ஸ்தாபகருமான தவத்திரு. சிவானந்தி அடிகள் கடந்த முதலாம் திகதி லண்டனில் சிவபதமடைந்தார்.

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் சைவ சமய வளர்ச்சிக்காகத் தன்னையே அர்ப்பணித்தவர். 1995ஆம் ஆண்டு கொழும்பு இராம கிருஷ்ண மிஷன் மண்டபத்தில் 'இன்றைய உலகச் சூழலில் சைவ மறுமலர்ச்சிக்கான செயற்றிட்டங்கள்' எனும் கருப்பொருளில் விசேட மாநாடு ஒன்றையும் இவர் நடத்தியிருந்தார்.

எதிர்வரும் 2ஆம் திகதி தொடக்கம் 6ஆம் திகதி வரை இரண்டாவது உலக மாநாடு நடைபெறவிருக்கும் இந்த வேளையில், இவரது மறைவு ஆழ்ந்த வேதனையைத் தருகின்றது என இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-ரி)

### தென்மராட்சி முன்பள்ளி ஆசிரியருக்கு!

யாழ்ப்பாணம்,ஏப்.11

தென்மராட்சி முன்பள்ளி ஆசிரியர்களுக்கான சேவைக்கால செயலமர்வுப் பயிற்சி வகுப்பு நடைபெறவுள்ளதாக தென்மராட்சி முன்பள்ளி ஆசிரியர் சங்கத் தலைவர் அறிவித்துள்ளார்.

மேற்படி பயிற்சி வகுப்பு தேனொளி முன்பள்ளியில் நாளை முதல் இரு தினங்களும் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 4.30 மணி வரை நடைபெறவுள்ளதாகவும் - சங்கத்தில் பதிவு செய்த ஆசிரியர்களும், முதன்மை ஆசிரியர்களும் இதில் தவறாது கலந்து கொள்ளுமாறும் - அவர் கேட்டுள்ளளர். (எ)

### மனிதவள அபிவிருத்தி பயிற்சிக்கு விண்ணப்பம்

யாழ்ப்பாணம்,ஏப்.11

யாழ்.பிரதேச செயலர் பிரிவில் வசிக்கும் இளைஞர், யுவதிகளிடமிருந்து மனிதவள அபிவிருத்திப் பயிற்சிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கட்டுமானம், ஒட்டுநர் பயிற்சிகளுக்கு ஆன்களும், பன்னவேலைப் பயிற்சிகளுக்குப் பெண்களும் கணனிக் கற்கைக்கு இருபாலாரும் விண்ணப்பிக்கலாம் என்றும் -

கட்டுமானம், ஒட்டுநர், பன்னவேலை ஆகிய பயிற்சிகளுக்கு ஆண்டு 8 சித்தியடைந்தவர்களும் -

கணனிப்பயிற்சிக்கு விண்ணப்பிப்போர் ஜி.சீ.ஈ.சாதாரண தரப் பரீட்சையில் ஆங்கிலத்தில் சாதாரண சித்தி பெற்றுள்ளதுடன் வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட குடும்பங்களைச சேர்ந்தவர்களாகவும் இருத்தல் வேண்டும் என்றும் -

யாழ்.பிரதேச செயலர் பா.செந்தில் நந்தனன் அறிவித்துள்ளார்.

மேற்படி விண்ணப்பங்கள் யாவும எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் யாழ்.பிரதேச செயலகத் துக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என்றும்- அவர் கேட்டுள்ளார்.(எ-ரி)

**பிறைற்றின்**

சங்கத்தானை, சாவகச்சேரி

**O/L DAY CLASS**

ஆரம்பம்:-12-04-2003

(16649) சனி 8.30a.m.



# SHELL GAS கம்பனியின் புத்தாண்டுச் சலுகை

வாடிக்கையாளர்களுக்கு எமது உளம் கனிந்த தமிழ்ப் புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்!

யாழ். குடாநாட்டு நவநாகரிக நங்கையர்களுக்கு ஒரு நற்செய்தி!!

SHELL GAS சமையல் எரிவாயுப் பாவனையாளர்களுக்கு தமிழ்ப் புத்தாண்டை முன்னிட்டு செல் காஸ் கம்பனியால் வெற்றுச் சிலிண்டர் ஒவ்வொன்றுக்கும் 300/= வீதம் கழிவு விலையில் வழங்கப்படுகின்றது. இதனை எம்மால் நியமனம் செய்யப்பட்ட முகவர் நிலையங்களிலும், எமது நிறுவனத்திலும் ஒரே நியம விலையில் பெற்றுக் கொள்ளலாம் என்பதை மிகவும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இந்த அரிய சலுகையை 20.04.2003 வரை மட்டுமே பெற்றுக்கொள்ள முடியும் என்பதையும் அறியத்தருகின்றோம். ஆகவே, இந்த அரிய சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்கள்.

**வெற்றுச் சிலிண்டர்**

பழைய விலை 2150/= புதிய விலை 1850/=

## செல் காஸ்

(சமையல் எரிவாயு)

| | | | |
|---|---|---|---|
| 37.5 | Kg. | செல் காஸ் விலை | 2,500/- |
| 12.5 | Kg. | செல் காஸ் விலை | 850/- |
| 4.5 | Kg. | செல் காஸ் விலை | 200/- |

### நமது முகவர்கள் வருமாறு

01. சிற்றி ஏஜென்சி - ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.
02. T.R.G. கொமினிக்கேசன் சென்ரர் - ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.
03. ஹரணி காட்வெயர்ஸ் - ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.
04. கரன் காட்வெயர்ஸ் - K.K.S. றோட், தட்டாதெரு.
05. லிங்கம் ஸ்ரோர்ஸ் - நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம்.
06. சிவன் ஸ்ரோர்ஸ் - பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி.
07. கஜமுகன் ஸ்ரோர்ஸ் - முத்திரைச் சந்தை, நல்லூர்.
08. விக்கி ஸ்ரோர்ஸ் - முடமாவடி, நல்லூர்.
09. ரட்ணா ஸ்ரோர்ஸ் - சின்னக்கடை, யாழ்ப்பாணம்.
10. பிருந்தா றேட்சென்ரர் - றக்கா றோட், யாழ்ப்பாணம்.
11. துளசி வர்த்தக நிலையம் - கொக்குவில்.
12. சிவா பிறதேர்ஸ் - திருநெல்வேலி.
13. சூரியா காட்வெயர்ஸ் - கலாசாலை வீதி, திருநெல்வேலி.
14. புகழ் ஸ்ரோர்ஸ் - சுன்னாகம்.
15. சிறி கணேசர் ஸ்ரோர்ஸ் - சுன்னாகம்.
16. கதிர்காமசிங்கம் அன் சன்ஸ் - அளவெட்டி.
17. சுதர்சன் ஸ்ரோர்ஸ் - உரும்பிராய்.
18. நெல்லைக்குமரன் றேடேர்ஸ் - நெல்லியடி.
19. ஜெயகணேசா ஸ்ரோர்ஸ் - பருத்தித்துறை.
20. மதுசன் ஸ்ரோர்ஸ் - உடுப்பிட்டி.
21. லிங்கம் ஸ்ரோர்ஸ் - தாவடி.
22. விதுஷா சுப்பர் மார்க்கட் - இணுவில்.
23. தினேஷ் பேக்கறி - மானிப்பாய்.
24. கலா றஞ்சிதா ஸ்ரோர்ஸ் - வல்வெட்டித்துறை.
25. யுனிற்றி ஹாட்வெயர்ஸ் - சாவகச்சேரி.
26. சசிரேகா ஸ்ரோர்ஸ் - கல்வியங்காடு.
27. மாரிஅம்மன் மோட்டேர்ஸ் - கோப்பாய்.
28. அம்பாள் ஸ்ரோர்ஸ் - வட்டுக்கோட்டை.
29. தேவன் ஸ்ரோர்ஸ் - துன்னாலை, கரவெட்டி.
30. மணியம் ஸ்ரோர்ஸ் - கொடிகாமம்.
31. கீறோ ஸ்ரோர்ஸ் - நவிண்டில்.
32. கோபி கிருஷ்ணா ஸ்ரோர்ஸ் - வல்வெட்டித்துறை.
33. சண்முகா ஸ்ரோர்ஸ் - சாவகச்சேரி.
34. சர்மிளா கொமினிக்கேசன் - கந்தர்மடம்.
35. சிவன் ஸ்ரோர்ஸ் - கோண்டாவில்.
36. சித்திவிநாயகர் களஞ்சியம் - தொண்டமானாறு.
37. சபா றேடிங் மோட்டேஸ் - அச்சுவேலி.
38. சுதா கொமினிக்கேசன் - கொக்குவில்.

*குறிப்பு:* எம்மால் முகவர்கள் நியமிக்கப்படாத இடங்களுக்கு முகவர்கள் எதிர்பார்க்கப்படுகின்றனர்.

**S.V.MURUGESU**
**Distributors for Shell Gas**

154, Hospital Road, Jaffna, Sri Lanka.
Phone: 2911, 2991

(16646)

அராலி, ஸ்ரீ முருகன் சனசமூக நிலையம்

மாபெரும்

## மரதன், சைக்கிள் ஓட்டப்போட்டி

அராலி, ஸ்ரீ முருகன் சனசமூக நிலையத்தின் 61ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு மாபெரும் மரதன், சைக்கிள் ஓட்டப் போட்டிகள் நடத்தப்படுகின்றன.

காலம்:- 13-04-2003 ஞாயிற்றுக்கிழமை
காலை 6.00மணி
14-04-2003 ஆண்டு நிறைவு விழா
பி.ப. 6.00மணி

இடம்:- நிலைய முன்றில்

பங்கு பற்றும் போட்டியாளர்கள் பதிவுகளை மேற்கொள்ளவும்.

- நிர்வாகம்.

விளம்பர அன்பளிப்பு:-

சுப்ப சூஸ்

75, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (16588)

## ஓராண்டு நினைவு தினம்

தோற்றம்
1922 - 02 - 24



மறைவு
2002 - 04 - 11

### திருமதி மேசி அரியமலர் குணரட்னம்

ஓராண்டு சென்றதம்மா உன்நினைவுகள் ஓயவில்லை
ஈரவிழிபதித்து நீ இருந்த இடமெல்லாம் தேடுகின்றோம்
தீராத சோகமம்மா உம்மறைவு எங்களுக்கு
வாராயோ அம்மா நீ அணைத்தெம்மை ஆற்றுவதற்கு!

"பிள்ளைகள் இல்லம்"
சங்கரப்பிள்ளை வீதி,
மானிப்பாய். (சி-27515)

கியூமெடிக்கா ஸ்தாபனம்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

## துயர் பகிர்கின்றோம்



### நாராயணபிள்ளை சிவசுப்பிரமணியம்

*(மணியம் களஞ்சியம் - கொடிகாமம்)*

இழக்க முடியாததை இழந்து ஆறாத்துயரில் மூழ்கியிருக்கும் அன்னாரின் குடும்பத்தினரோடு நாமும் சேர்ந்து துயர்பகிர்கின்றோம்.

(சி-27314) - குடும்ப நண்பர்கள்.

## மரண அறிவித்தல்

### நாராயணபிள்ளை சிவசுப்பிரமணியம்

(மணியம் களஞ்சியம், கொடிகாமம்)

உசன், மிருசுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாராயணபிள்ளை சிவசுப்பிரமணியம் 08.04.2003 செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாராயணபிள்ளை - தங்கமலர் ஆகியோரின் அன்பு மகனும் மல்லாகத்தைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான முருகேசு (C.T.B) - அன்னம்மா ஆகியோரின் மருமகனும் சீவரத்தினத்தின் அன்புக் கணவரும் கார்த்திகேசு (Ret. தபாலக ஊழியர்), சிவகுரு காலஞ்சென்ற வேலாயுதபிள்ளை ஆகியோரின் சகோதரனும் ராஜீவன் (நோர்வே), சுரேஸ்குமார்(J.T.I. நிறுவனம்), ராஜ்குமார் (லண்டன்), விஜிதா (கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலய ஆசிரியை), சுஜாதா (யூனியன் அஷ்யூரன்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் விக்ரிஸ்(நோர்வே), சாந்தி, பரம்தில்லைராஜன் (பளை மத்திய கல்லூரி ஆசிரியர்), குணரேகா, ஹரிகரன் (சுவீடன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் சாமினி, கபிலா, கார்முகி, கபிலினி, விதூஷன், யதூஷன், பிரதீப்ராஜ், அபிராஜ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 13.04.2003 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் ஈச்சங்காட்டு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: சுரேஸ்குமார்
(மகன், J.T.I நிறுவனம்)
பரம்தில்லைராஜன்
(மருமகன், பளை மத்திய கல்லூரி)

*உசன், மிருசுவில்.*

(c/27313)

# முதலாவது ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 15 - 02 - 1941



உதிர்வு 23 - 03 - 2002

மாவிட்டபுரம், V.C.C., தெல்லிப்பழையைச் சேர்ந்த

**அமரர் முருகன் வேலாயுதம்**

பாசத்தின் பிறப்பிடமே! பண்பின் சிகரமே!!
ஆண்டொன்று தானோடி மறைந்தாலும்
எம் கண்ணீரோ வற்றாது - இவ்வுலகில்
உள்ளவரை உம்நினைவில் வாழ்ந்திடுவோம்.
உம் ஆத்மா சாந்திபெறுவதாக! ஓம் சாந்தி!!

தற்போதைய முகவரி:
3 ஆம் கட்டை, மானிப்பாய் வீதி,
ஆனைக்கோட்டை. (C-27327)

மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.


## கலாபூஷண விருதுக்கு விண்ணப்பம்

சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் வழங்கப்படும் 'கலாபூஷண விருது' க்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. சிற்பம், ஓவியம், வாய்ப்பாட்டு, நடனம், தவில், நாதஸ்வரம், நாடகம், சினிமா, நாட்டுப்புறவியல், இலக்கியம், நாட்டுக்கூத்து போன்ற துறைகளில் சிறப்பான சேவையாற்றியோர் இந்த விருதுக்கு விண்ணப்பிக்க முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி விருதுக்கு விண்ணப்பிப்போர் 60 வயதைப் பூர்த்திசெய்தவர்களாக இருக்கவேண்டும் என்றும் -

விருதுக்கான விண்ணப்ப படிவங்களை பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் கலாசார உத்தியோகத்தர்களிடம் பெற்றுக்கொள்ளலாம் என்றும் - அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கிடையில் - மேற்படி விருதுக்கான விண்ணப்பங்களை எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் தமக்கு அனுப்பிவைக்குமாறு யாழ்.மேலதிக அரச அதிபர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம் போல் சகல பிரதேச செயலர் பிரிவுகளையும் கேட்டுள்ளார். (ஏ-86)

## விவசாயக் குழுக் கூட்டம்

ஊர்காவற்றுறை பிரதேச விவசாய குழுக்கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் உதவி அரச அதிபர் ஜே.எக்ஸ்.செல்வநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது. (ஏ-73)

## ஒளியாய்த் திகழ்வோம்!

### தவக்காலச்சிந்தனை 38ஆம் நாள்

கணனி என்னும் இந்த யுகத்தில நாம் இறைவனை மறந்து உலகின் சிற்றின்பங்களுக்கு கட்டுப்பட்டு அவற்றையே எம் வாழ்நாளில் கடைப்பிடித்து வருகின்றோம். கிறிஸ்தவர்களாகிய நாம் உலகிற்கு உப்பாய், ஒளியாய்த் திகழவேண்டும்.

உப்பு இல்லாத பண்டம் குப்பையிலே என்று சொல்வார்கள். ஏனெனில், உப்பில்லாத எந்தப் பண்டத்தையும் நாம் சுவையாக உண்ணமுடியாது. ஆகவே, அந்தப்பண்டம் எமக்குப் பயன தராது. ஆகவே,நாம் பிறருக்கு உகந்தவர்களாக வாழவேண்டும் என்றால் உப்பாக வாழவேண்டும்.

இவ்வுலகில் ஒளி இல்லாதவிடத்து நாம் ஒரு செயற்பாட்டிலும் ஈடுபட முடியாது. ஏன் நமது வீடுகளிலே இரவு வேளையில் மின்சாரம் திடீரென்று இல்லாமல் போனால் நாம் எக்கருமத்திலும் ஈடுபடமாட்டோம். ஏனெனில், நமது வீட்டை இருள் சூழ்ந்திருக்கும். ஆகவே, நாம் ஒளியாய் மற்றவருக்கு பயன்பாடு உடையவர்களாய் வாழ வேண்டும்.

எனவே, இந்த தவக்கால நாளிலே பொய்மையையன்றி, உண்மையையும் தீமையையன்றி, நன்மையையும் சுயநலத்தையன்றிப் பிறர் நலத்தையும் துன்மாதிரிகையையன்றி முன் மாதிரிகையையும் கொண்டவர்களாக வாழ வேண்டும்.

யேசுநாதர் யாருக்காக? எதற்காக? இந்தப் பாடுகளைப்பட்டார். நமக்காக நாம் செய்த பாவங்களுக்காக. ஆகவே, நாம் இந்த உண்மையை உணர்ந்து இந்த தவக்கால நாள்களிலே உலகிற்கு உப்பாய், ஒளியாய் திகழ அழைக்கப்படுகின்றோம். ★

**ம.மேரி சோபியா**


சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு
மாபெரும் சிறப்புத் தள்ளுபடி

ராசி சில்க்ஸ் இணைந்து செய்யும் நல்லி சில்க்ஸ்

**மாபெரும் மலிவு விற்பனை**

உண்மை! உண்மை!! உண்மை!!!
ஆனால் நம்பமாட்டீர்கள்.
ஒரு தரம் வந்து பார்த்தால் தெரியும் அதன் உண்மையை.
இந்தியாவில் இருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்டவை.
சாறிகளில் எத்தனையோ வகை!
70 டிசைன்களுக்கு மேல் (நோமல் முதல் பனாரிஸ் வரை).
★ பஞ்சாபி ஹிற், சோளி ஹிற் எத்தனையோ டிசைன்களில் எண்ணற்றவை.
★ சிறுவர்கள் ஆடைகள் பல டிசைன்களில்.
இளையவர் முதல் பெரியவர் வரை
அனைத்து ரக ரெடிமேற் ஆடைகளையும் பெற்றுக்கொள்ளலாம்.
ஏப்ரல் - 07 முதல் 14 வரை இக்கழிவு.

ராசி சில்க்ஸ்
70, 71A, நவீன சந்தை உட்புறம்,
யாழ்ப்பாணம்.
T.P. 021 - 222 5571

நல்லி சில்க்ஸ்
121/1, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
T.P. 021 - 222 5573

(சி-27329)



புதியதோர் உதயம்! சாவகச்சேரியில்!!

தென்மராட்சி மக்களின் நன்மைகருதி
★ பற்சிகிச்சை நிலையம் ★ ஒன்று
ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றனர்.

**றெனி பல் - மூக்குக் கண்ணாடி அகம்**

கண்டி வீதி, சாவகச்சேரி.

★ பிரதி சனிக்கிழமை தோறும் பிற்பகல் ஒரு மணிமுதல் 3 மணிவரை சிகிச்சை அளிக்கப்படும்.
★ முற்பதிவுகள் ஏற்றுக்கொள்ளப்படும். (C/27326)



தீர்க்கதரிசி ஹாவாட் வில்லாட்
PROPHET HOWARD A WILLARD

★ உங்கள் குணமாக்க முடியாத வியாதியை குணமாக்க-----
☆ உங்கள் எதிர்காலத்தை குறித்து எதிர்வு கூற-----

சந்திக்க வாரீர்

எங்கே? அசெம்பிளி ஒப் கோட், சாவகச்சேரி
(பிரதான வீதி, பழைய உதவி அரசாங்க அதிபர் காரியாலயம் அருகே)
எப்போது? 10,11,12,13 ஏப்ரல் 2003
மாலை 4.30 மணிக்கு ஆரம்பமாகி 7.00 மணிக்கு முடிவடையும்.

(சி-27282)


## அரசாங்க அறிவித்தல்

### மாகாணப் பிரதிப் பணிப்பாளர் பணிமனை, சுகாதார சேவைகள், யாழ்ப்பாணம்

### வாகனங்கள் சேவிஸ் செய்வதற்கான கூறுவிலை - 2003

மேற்படி விடயமாக 25.04.2003 முற்பகல் 10.00 மணிவரை கூறுவிலைகள் ஏற்றுக்கொள்ளப்படும். உரிய கேள்விப் படிவங்களை ரூபா 100/- படிவக் கட்டணமாகவும் ரூபா 1,000/- கேள்விப்பிணையாகவும் செலுத்தி 24.04.2003 பிற்பகல் 3.00 மணிவரை இவ்வலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். கூறுவிலைகள் விவரம் எழுதப்பட்ட, சீல் வைத்த உறையிலிட்டு இதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். வேறு விவரங்களை அலுவலக நேரங்களில் அறிந்துகொள்ளலாம்.

*வைத்திய கலாநிதி உ.சிவபாதசுந்தரம்*
மாகாண பிரதிப் பணிப்பாளர்,
சுகாதார சேவைகள், யாழ்ப்பாணம்.
(சி-27328)


# சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

செல்லுபடியாகும் டிக்கட் தொடர் இல. 2568275 இருந்து 2586781 வரை
சீட்டிழுப்பு இல. 1391
திகதி 09.04.2003

**வெற்றி எண்கள்** 09 17 21 37 48
**போனஸ் எண்** 39

ஜக்பொட் பரிசு
**ரூபா.1,500,000/-** வெல்லப்பட்டுள்ளது

| பொருந்திய எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத்தொகை | தொகை |
|---|---|---|---|
| 5 | 01 | 1,500,000/- | 1,500,000/- |
| 4 எண்களுடன் போனஸ் எண் | 03 | 100,000/- | 300,000/- |
| 4 | 115 | 10,000/- | 1,150,000/- |
| 3 | 5,862 | 500/- | 2,931,000/- |
| 2 | 97,052 | 20/- | 1,941,040/- |
| சீட்டிழுப்பில் ஆகக்குறைந்த 09ம் எண் (போனஸ் எண் தவிர்த்து) | 119,115 | 10/- | 1,191,150/- |

வெல்லப்பட்ட மொத்த தொகை ரூபா.8,013,190/-

இந்த சனிக்கிழமைக்கான ஜக்பொட்
**ரூபா. 1,500,000/-**

தொடர் இல. 2568312க்கு மேற்பட்ட பச்சை நிற டிக்கட்டுகள் 2003 ஏப்ரல் 12ம் திகதி சனிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி,
கொழும்பு 3.


யாழ்ப்பாணத்தில் : விநியோகஸ்தர்,
34, சுந்தப்பசேகரம் வீதி,
(பஸ் நிலையம் முன்பாக),
யாழ்ப்பாணம்.

சனிக்கிழமை அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் தங்கப்பரிசு வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

2582536-7-94
2575277-5-46
2568769-3-41
2572104-1-34
2570895-1-95

PHOENIX O&M






RG
இரத்தினகோம்பிளக்ஸ்
63, 65, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.
(C/27237)

# ஆங்கில மருந்து வகைகளை மலிவாக விற்பனை செய்வதில் ரியாஸ் ஆர்வம்

## உள்ளூரில் உற்பத்தி செய்ய அரசிடம் அனுமதி கோருகிறார்

*கேள்வி:-* ஆங்கில மருந்து வகைகளை இறக்குமதிசெய்து விநியோகிப்பதில் கடும் போட்டி நிலவுகினறது. இந்தப் போட்டிக்கு மத்தியில் நீங்கள் இந்தத் துறையில் வெற்றிகண்டது எப்படி?


*பதில்:-* ஆமாம். இந்தத் துறையில கடும் போட்டி நிலவுவது உண்மைதான். ஆனால், நான் இந்தத் துறையில் காலடி வைப்பதற்கு முன்னர் இந்தத் துறை குறித்து ஆராய்ந்தேன். பல நிறுவனங்கள் அருகிலுள்ள இந்தியாவை விட்டுவிட்டு மேலைத்தேய நாடுகளில் இருந்து மருந்து வகைகளை இறக்குமதிசெய்து விநியோகித்து வருகின்றன. இதனால் மருந்துகளின் விலை மிக அதிகமாக இருந்தது.

நோயாளர்கள் மருந்து வகைகளைக் கொள்வனவு செய்ய வசதியிலலாமல் தடுமாறினர். நான் இந்தியாவலிருந்து ஆங்கில மருந்து வகைகளை இறக்குமதிசெய்து குறைந்த விலைக்கு விநியோகம் செய்தேன். இதனால் எனது கம்பனி குறுகிய காலத்தில் துரித முன்னேற்றம் அடைந்தது.

*கேள்வி:-* நீங்கள் இந்தத் துறையை மேலும் அபிவிருத்தி செய்ய ஏதாவது திட்டம் வகுத்துள்ளீர்களா?

*பதில்:-* ஆம். நான் ஆங்கில மருந்து வகைகளை இங்கேயே உற்பத்தி செய்யத் திட்டமிட்டிருந்தேன். இதற்கான திட்டங்கள் அனைத்தும் தயாரிக்கப்பட்டு விட்டன. உள்ளூரில் ஆங்கில மருந்து வகைகளை உற்பத்தி செய்தால் இந்திய மருந்து வகைகளைவிட குறைந்த விலையில நோயாளர்களுக்குக் கிடைக்கும். ஆனால், நான் அரசுக்கும் சுகாதார அமைச்சுக்கும் மருந்து வகைகளை உற்பத்தி செய்வதற்கான அனுமதியைக் கோரியிருந்தேன். ஆனால், இதுவரை அனுமதி கிடைக்கவில்லை.

ஆங்கில மருந்து வகைகளை உள்ளூரில் உற்பத்தி செய்து நாடு முழுவதும் விநியோகிப்பதன் மூலம் குறிப்பாக நோயாளர் மிகக் குறைந்த விலையில் ஆங்கில மருந்துவகைகளைக் கொள்வனவு செய்யக்கூடியதாக இருக்கும். அத்துடன், மருந்து வகைகளைத் தயாரிக்கும் தொழிற்சாலை மூலம் பல இளைஞர், யுவதிகளுக்கு நேரடியாக வேலைவாய்ப்புக்கள் கிடைக்கும். - இவ்வாறு கூறினார் அஹமட் ரியாஸ்.



ரீ.என்.எல்.தொலைக்காட்சி 'நேருக்குநேர்' நிகழ்ச்சியில் தொழில் அதிபர் அஹமட்ரியாஸை அறிவிப்பாளர் சமுதிக சமரவிக்ரமவும், 113 கம்பனிகளைக்கொண்ட சிலிங்கோ குழுப்பின் அதிபரும் நிர்வாகப் பணிப்பாளருமான தேசமான்ய லலித் கொத்தலாவலையும் செவ்வி காண்கிறார்கள். இடமிருந்து இரண்டாவதாக அமர்ந்திருப்பவர் மொழிபெயர்ப்பாளர் குணரத்தினம்.

**வர்த்தக ஸ்பெஷல்**

ரீஎன்எல்தொலைக்காட்சியின் வர்த்தக ஸ்பெஸல் - நேருக்கு நேர் நிகழ்ச்சியில் கடந்த 8 ஆம் திகதி தோன்றி, தனது தொழில் முன்னேற்றம் பற்றி விளக்கினார் அஹமட் ரியாஸ்.

ஹார்கோட்ஸ் பிரைவேற் லிமிட்டட் ஆங்கில மருந்து வகைகளை இறக்குமதி செய்து முழு இலங்கைக்கும் விநியோகித்து வருகின்றது. அதன் உரிமையாளர் அஹமட் ரியாஸ்.

இவரது தந்தை ஒரு எம்.பி.பி.எஸ். மருத்துவர். தனது மகனும் தன்னைப்போல் ஒரு மருத்துவராக வரவேண்டும் என நினைத்தார். ஆனால், சில புள்ளிகள் மகனுக்குக் குறைவாகக் கிடைத்ததால் தந்தையின் கனவு பலிக்கவில்லை.

இருப்பினும், அஹமட் ரியாஸ் மருத்துவத் துறையுடன் சம்பந்தப்பட்ட தொழில் ஒன்றைச் செய்யவேண்டும் என்ற வைராக்கியத்தில் ஆங்கில மருந்து வகைகளை இறக்குமதி செய்து, விநியோகிக்கும் கம்பனியை ஆரம்பித்தார்.

ஆங்கில மருந்து வகைகளை உள்ளூரிலேயே தயாரிக்கவும் அரசாங்கத்திடம் அனுமதி கோரியுள்ளார். ஆனால், அதற்கான அனுமதி கிடைக்கவில்லை என்கிறார் ரியாஸ்.

இந்தநிலையில், ஆங்கில மருந்து வகைகளை இலங்கையிலேயே தயாரிக்க தேசமான்ய லலித் கொத்த லாவலை அனுமதிபெற்றுத் தருவதாக உறுதியளித்துள்ளார்.

ரீஎன்எல்தொலைக்காட்சியில் தொழில் அதிபர் அஹமட் ரியாஸை அறிவிப்பாளர் சமுதிக சமரவிக்ரமவும், 113 கம்பனிகளைக் கொண்ட சிலிங்கோ குழுப்பின் அதிபரும் நிர்வாகப் பணிப்பாளருமான தேசமான்ய லலித் கொத்தலாவலையும் செவ்வி கண்டனர்.

செவ்வியை இங்கே படித்துப் பாருங்கள்.


# யாழ்ப்பாணத்தில் சக்தி தரும் சித்திரை விழா - 2003

## யாழ். மக்களுக்கான போட்டிகள்

சக்தி TV

**1. மரதன் ஓட்டம் 20Km** (வயதெல்லை இல்லை)
திகதி: 12.04.2003
**(வீதி ஓட்டம் ஆண்கள்) (Road Race)**

★ இப்போட்டிக்கு விண்ணப்பித்தவர்கள் 12.04.2003 சனிக்கிழமை காலை 6.30 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் தங்களுக்குரிய இலக்கங்களைப் பெற்றுக்கொள்ளவும்.

**2.சைக்கிள் ஓட்டப்போட்டி 60Km** (ஆண்கள்) (வயதெல்லை இல்லை)
திகதி: 13.04.2003 காலை 6.30 மணிக்கு

**வெற்றி பெற்றவர்களுக்கு சிறந்த பரிசுகள் காத்திருக்கின்றன.**

விண்ணப்பித்தவர்களுக்கான கூட்டம்
நாளை (12.04.2003) சனிக்கிழமை பி.ப.2.00 மணிக்கு
யா/மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

*குறிப்பு:-* ★ கிரிக்கெட் கழகங்களுக்கான தெரிவுக்கூட்டம் இன்று மாலை 4.30 மணிக்கு அருணாஸ் ஸ்போட்ஸ் மண்டபத்தில் நடைபெறும். குறித்த நேரத்தில் சமுகமளிக்கத் தவறும் அணிகள் தெரிவுக்குழுவிலிருந்து நீக்கப்படும்.

★ஓடும் பாதை பற்றிய வரைபடங்கள் விரைவில் உதயன் பத்திரிகையில் வெளியிடப்படும்.

★ இராணுவத்தினர் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் எவரும் இப்போட்டியில் பங்குபற்ற முடியாது.

*நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.*

13.04.2003 பிற்பகல் 1மணிமுதல் யாழ். மத்தியகல்லூரி மைதானத்தில் சித்திரை வருட நிகழ்ச்சிகள் நடைபெறும்.

"சக்தி மிக்கவர்களின் திறமையை சக்தி FM யாழ்ப்பாணம் 91.5 வெளிக்கொணரும் சக்தி" கொழும்பு - 105.1

(சி-27350) மேலதிக விவரங்கள் நாளைய உதயனில்...!

### மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டிக்கு தெரிவான அணிகளின் விவரம்

1. ஸ்ரார் விளையாட்டுக்கழகம், பொன்னையா வீதி, ஆனைக்கோட்டை.
2. J.D.M.B.A. லக்ஷ்மி பேக்கரி, ஆறுகால்மடம்.
3. இளந்தென்றல் வி.கழகம், அம்பாள் வீதி, கொக்குவில் மேற்கு.
4. K.C.C., இல.70, சிவன்பண்ணை வீதி, யாழ்ப்பாணம்.
5. பொற்பதி வி.க., 73, பொற்பதி றோட், கொக்குவில்.
6. மேஜர் முரளி விளையாட்டுக்கழகம், கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
7. Star Cricket Team, கற்குளம் லேன், கொட்டடி.
8. C.B.Z. வி. கழகம், இல. 27, சப்பல் வீதி, யாழ்ப்பாணம்.
9. வில்லி வி. கழகம், இல.34, 4ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.
10. போஸ் ஸ்ரார் வி. கழகம், இல.68, 4ஆம் குறுக்குத்தெரு, யாழ்பாணம்.
11. F.S.S.C. இளைஞர் கழகம், இல. 100, வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.
12. கலைவாணி வி. கழகம், நாவாந்துறை, யாழ்ப்பாணம்.
13. நியூ ஸ்ரார் வி. கழகம், ராஜாமில் வீதி, தாவடி, கொக்குவில்.
14. யங்ஸ்ரார் வி. கழகம், உடுவில்.
15. இளங்கதிர் வி. கழகம், சீனிவாசகம் றோட், கொட்டடி.
16. உடுவில் ஐக்கிய வி. கழகம், டச்றோட், உடுவில்.
17. நல்லூர் ஐக்கிய வி. கழகம், 443, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
18. இணுவில் இந்து வி. கழகம், இணுவில் கிழக்கு, இணுவில்.
19. நவசக்தி வி. கழகம், உரும்பிராய் வடக்கு, உரும்பிராய்.
20. சில்வஸ்ரார் வி. கழகம், 115/2 அம்பலவாணர் வீதி, அத்தியடி.
21. மரியன்னை பேராலயம் வி. கழகம், யாழ். மரியன்னை பேராலயம்.
22. கோல்ட் ஸ்ரார் வி. கழகம், 145, 4ஆம் குறுக்குத்தெரு யாழ்ப்பாணம்.
23. விஷ்ணு வி. கழகம், 25, யாழ். றோட்.
24. Sea Cockes, 31/2 சங்கிலியன் வீதி.

போட்டி விதிகளுக்கு அமைய முதல் 24 கழகங்களும் அணித்தெரிவுக்கு உட்படுத்தப்படும். குறித்த நேரத்தில் 24 கழகங்களுள் சமுகமளிக்கத் தவறும் கழகங்களுக்குப் பதிலாக கீழுள்ள ஒழுங்கில் அணிகள் தெரிவுசெய்யப்படும்.

01. Pepsico Club, 244, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
02. அரியாலை இளைஞர் கழகம், 20, கனகரட்ணம் வீதி, யாழ்ப்பாணம்.
03. இளைய நட்சத்திர வி. கழகம், 18/6 றெக்கிமா லேன், குருநகர்.
04. ஐங்கரன் கழகம், யாழ். வீதி.

## நன்றி நவிலல்

நேற்று (10.04.2003) வியாழக்கிழமை காலமான எனது தாயார்
**திருமதி நாகபாக்கியம் பொன்னுத்துரை**
அவர்களின் இறுதி மரணச்சடங்குகளில் பங்குபற்றி உதவிகள் பல செய்து, மன ஆறுதல் அளித்த அனைவருக்கும் தாழ்மையுடன் நன்றிநவில்கின்றேன்.

Dr.திருமதி ஜெயதேவி கணேசமூர்த்தி
யாழ்.போதனா வைத்தியசாலை,
659, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
Tel.No.:222 2832

(16668)

## பத்திரிகை விநியோகஸ்தர்கள் தேவை

கொழும்பில் பத்திரிகை விநியோகிப்பதற்கு ஆள்கள் தேவை. தங்குமிட வசதி வழங்கப்படும். மோட்டார் சைக்கிள் லைசன்ஸ் உரியவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். லைசன்ஸ் பெறவிரும்புவோருக்கு அதற்கான ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும். நேரில் வரவும்.

மனித வள அலுவலர்,
உதயன் பத்திரிகை நிறுவனம்,
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(C-27347)

## ST.JOHN'S COLLEGE JAFFNA
### OLD BOYS' ASSOCIATION

வருடாந்த ஒன்றுகூடலும் பொதுக்கூட்டமும்

The 88th Annual General Meeting of the Old Boys' Association is scheduled to be held on the 12th of April 2003 (Saturday) at 8.30 a.m. in the College Auditorium as announced earlier. We have great pleasure in inviting all the Old Boys along with their spouses.

**The Programme For the Day**

7.00 a.m. Holy Communion Service
8.00 a.m. Fellowship Breakfast
8.30 a.m. Annual General Meeting
1. Prayer
2. Vote of Condollence
3. Minutes of the Last AGM
4. Principal's Review
5. Annual Report
6. Statement of Accounts
7. Election of Office Bearers

9.30 a.m. Cricket Match - Old Boys Vs Present Boys
1.30 p.m. Fellowship Lunch
4.30 p.m. Principal's Tea
5.15 p.m. Football Match - Old Boys Vs Present Boys

Kindly accept this invitation as no individual invitations Would be sent.

Breakfast (30/=) and Lunch (100/=) tickets are available from the treasurer Mr.T.Nanathakumaran at the College.

S.Thanapalan, Principal
K.Kesavan, President
P.Thayaparan, Secretary
(c-27352)

## பொருளியற் கல்லூரி

பெருமாள் கோவில் அருகில்
நாவலர் றோட்.
யாழ்ப்பாணம்.

இணுவில் மத்திய கல்லூரி அருகில்
கே.கே.எஸ். றோட்
இணுவில்.

இரு இடத்திலும்

### A/L - 2005
கலை, வர்த்தகப் பிரிவுகள்

புதிய பிரிவு - ஆரம்பம்: 12.04.2003 சனி
சகல பாடங்களும் ஆரம்பத்திலிருந்து கற்பிக்கப்படும்.
எமது தனித்துவம் பெற்ற ஆசிரியர் குழு

| பாடம் | யாழ்ப்பாணம் | இணுவில் |
|---|---|---|
| பொருளியல் | வரதராஜன் | வரதராஜன் |
| கணக்கீடு | முகுந்தன் | முகுந்தன் |
| வணிகக்கல்வி | முரளி | முரளி |
| தமிழ் | மீரா | பாலா |
| இந்துநாகரீகம் | ஜோதீஸ்வரன் | சுரேஸ் |
| அளவையியல் | R.P.சர்மா | R.P.சர்மா |
| புவியியல் | குமரன் | குமரன் |
| நாடக அரங்கியல் | சுகந்தன் | J. சுதன் |
| இந்துசமயம் | தரன் | தரன் |
| அரசியல் | ரஜீவன் | ரஜீவன் |
| வரலாறு | சுதன் | சுதன் |
| கிறிஸ்தவம் | வசந்தன் | வசந்தன் |
| ஆங்கிலம் | நிஷாந்தன் | நிஷாந்தன் |

யாழ் நகரில்: கலைப்பிரிவு - 9.00 a.m.; வர்த்தகப்பிரிவு - 10.30 a.m.
இணுவிலில்: கலைப்பிரிவு - 7.00 a.m.; வர்த்தகப்பிரிவு - 3.00 p.m.

(C-27351)

## பொருளியற்பாட கருத்தரங்கு

க.பொ.த (உ/த) பரீட்சையில் தோற்றும் மாணவர்களுக்கான பொருளியற் பாடக் கருத்தரங்கு நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். கனகரத்தினம் ம.ம.வித்தியாலயத்தில் நடைபெறும். பொருளியற் றுறை ஆசிரியர் வே.கருணாகரன் இக்கருத்தரங்கை நடத்துவார்.

## நாகம்ஸ் சுன்னாகம்

விஜய், ஸ்நேகா, ரகுவரன நடித்த
**வசீகரா** (கிஸல்)
14 ஆம் திகதிமுதல்
என்றென்றும் காதல்
தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00 (பு.நேரம்)
(16637)

Mr.M.SPELLMEN
அறிவொளி நல்லூர்
**Physics**
Mr. ம.ஸ்பெல்மன்
**A/L 2005**
பொறியியல்
ஆரம்பம்:
12.04.03 SAT. 3.30 - 4.30 p.m.
SAT., SUN. 3.30 - 4.30 p.m.

**A/L 04**
புலங்கள்
ஆரம்பம்:
12.04.03 SAT. 4.30 - 5.30 p.m.
SAT., SUN. 4.30 - 5.30 p.m.

**A/L 04**
அலகு ரீதியான
வினா-விடை வகுப்பு
ஆரம்பம்:
12.04.03 SAT. 5.30 - 6.30 p.m.
SAT., SUN. 5.30 - 6.30 p.m.
Mr.M.SPELLMEN
PHYSICS PHYSICS
(16655)

## திகழ் கல்வி நிறுவனம்

கே.கே.எஸ்.வீதி, இணுவில்.
கலை, வர்த்தக, கணித, விஞ்ஞான பிரிவுகள்
O/L பகல் நேர வகுப்புகள்
விசேட ஆங்கில வகுப்புகள்
தரம் 4 - 13 வரை.
ஆசிரியர் - S.Sri
அடிப்படையில் இருந்து கற்பிக்கப்படும்.
**ஆரம்பம்: 12.04.2003**
சனி மாலை 4.00 மணி (பு.நே.)
(16661)

## நியூ டென் யாழ்.நகர்
ஆரியகுளம் சந்தி, அருகில்.

**A/L - 2005**
TAM - K.தர்மராஜா
H.C, HIN } க.சத்தியதாசன்
LOG - P.கமல்
GEO - K.கிரிதரன்
HIS - K.ஜெயக்குமார்
PO.SI - S.சுபாஸ்கரன்
ஆரம்பம்: 12.04.2003
சனி காலை - 8.00 மணி (பு.நே.)
(16650)

## NEW SCIENCE COLLEGE
கன்னாதிட்டி றோட், யாழ்ப்பாணம்.

**A/L - 2005**
தமிழ்
திரு. அமரசிவம்
ஆரம்பம்:
12.04.2003, சனி - 10.30
**A/L - 2004**
11.30, சனி, ஞாயிறு.
(16658)

## NEW SCIENCE CENTRE
JAFFNA

**A/L -2004**
மின்புலம்
Sat., Sun. 6.00 - 7.00 a.m.
**A/L-2005**
பொறியியல்
Sat., Sun. 8.00 - 9.00 a.m.
By: M.கருணாநிதி
ஆரம்பம்: 12.04.2003
(16660)

## படிவம்

க.பொ.த. (சா.த.)ப் பரீட்சை 2002 டிசெம்பர் பெறுபேறுகளை மீளாய்வு செய்வதற்கான விண்ணப்பப்படிவம் உண்டு.
**முடிவு திகதி 12.05.2003**
BHARATHI PATHIPPAKAM
OFF SET PRINTERS
430, K.K.S. ROAD, JAFFNA.
(C-27330)

## நிறைஞ்சனாஸ்

கா.நேரம்:- 11.00, 2.45, 6.00 (பு.நே.)
பாடசாலை மாணவர்கள் பார்த்து மகிழக்கூடிய படம்
**JURASSIC PARK 3**
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே.)
**BEST OF THE BEST**
14 ஆம் திகதி முதல் ரமணா
(C-27279)

## NIRU TUITION CENTRE
Kondavil

**2005 A/L**
பொறியியல்
SAT., SUN. - 3.30 - 4.30
ஆரம்பம்: 12.04.2003
By.M.கருணாநிதி
(16663)

## ராஜா யாழ்ப்பாணம்

ஸ்ரீகாந், பூ... வக், ராதிகா
**ரோஜா கூட்டம்**
10.30, 2.30, 6.30
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 9.30.
புதுவருட வெளியீடு - அரசு
(C-27278)

## துயர்பகிர்தல்

**திருமதி பொன்னுத்துரை நாகபாக்கியம்**
அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தின் துயரில் நாமும் பங்கெடுக்கின்றோம.

18 ஆம் அணி மாணவர்கள்,
யாழ்.மருத்துவபீடம்.

(16669)

## கண்ணீர் அஞ்சலி

எமது நிறுவனத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றும் *திருமதி சுஜாதா ஹரிகரன்* அவர்களின் அன்புத் தந்தையார் பிரபல வர்த்தகர்
**நாராயணபிள்ளை சிவசுப்பிரமணியம்**
(மணியம் களஞ்சியம், கொடிகாமம்)
அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*குறிப்பு:* மேற்படி மரணச் சடங்கிற்கு செல்வதற்காக இன்று (11.04.2003) வெள்ளிக்கிழமை பி.ப. 1.30 இற்கு அனைத்து உத்தியோகத்தர்களையும் அலுவலகத்திற்கு சமுகந்தருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*யூனியன் அஷ்யூரன்ஸ் லிமிட்டட், யாழ். பிராந்தியம்.*
முகாமையாளரும், உள்ளக, வெளிக்கள உத்தியோகத்தர்களும்.
(16647)

## மரண அறிவித்தல்கள்

### முத்தையா சிவசுந்தரம்

(முன்னாள் உரிமையாளர், சிறி கணேசன் மெடிக்கல் ஸ்ரோர்ஸ், K.K.S. றோட் யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முத்தையா சிவசுந்தரம் நேற்று (10.04.2003) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்தையா - தங்கம் தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும் தங்கம்மாவின் அன்புக் கணவரும் சிவசுப்பிரமணியத்தின் பாசமிகு சகோதரனும் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து - இலச்சுமி ஆகியோரின் மருமகனும் கலாராணி, சிவகுமார், காலஞ்சென்ற சிவபாலன் (சிவன்பில், உரிமையாளர்) மற்றும் கலாவதனி ஆகியோரின் பாசமிகு தந்தையும் கணேசலிங்கம் (தொழில்நுட்ப உத்தியோகத்தர், யாழ். மாநகரசபை), இராச்குமார் (சுகாதார பரிசோதகர், கொழும்பு) ஆகியோரின் மாமனாரும் குகதர்சன் (யாழ். இந்துக் கல்லூரி), பிரகாசினி (யாழ். இந்து மகளிர் கல்லூரி), பிரியதர்சன் (யாழ். புனித யோன் பொஸ்கோ வித்தியாலயம்), நிபயன் (கொழும்பு), நேமினா (மங்கையர் கழகம், கொழும்பு) ஆகியோரின் அன்புப் பேரனும் நகுலேஸ்வரி (முன்னாள் இளைப்பாறிய ஆசிரியை, யாழ். மங்கையர்க்கரசி வித்தியாலயம்), சுப்பிரமணியம், சரஸ்வதி, அன்னப்பிள்ளை ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.04.2003) வெள்ளிக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மாலை 3 மணிக்கு தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

*229, சட்டநாதர் வீதி, திருநெல்வேலி கிழக்கு, திருநெல்வேலி.*
தகவல்: திருமதி சி.தங்கம்மா (மனைவி)
(16666)

### நடராசா சண்முகராசா (ஆசிரியர்)

*(பரவிப்பாஞ்சான், கிளிநொச்சி)*

அச்சுவேலி, கதிரிப்பாயைப் பிறப்பிடமாகவும் கிளிநொச்சி, பரவிப்பாஞ்சானை வசிப்பிடமாகவும் பன்னங்கண்டி அ.த.க.பாடசாலை ஆசிரியருமான நடராசா சண்முகராசா அவர்கள் (கிளிநொச்சி மத்திய கல்லூரி, கனகபுரம் மகாவித்தியாலயம் ஆகியவற்றின் முன்னாள் சிரேஷ்ட ஆசிரியர்) நேற்று (10.04.2003) வியாழக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் திருயோகச்செல்வராணியின் (கல்வித்திணைக்களம் - திருகோணமலை) அன்புக் கணவரும் அஜந்தனின் (பழைய மாணவன் கிளிநொச்சி மகாவித்தியாலயம்) அன்புத் தந்தையும் காலஞ்சென்றவர்களான வை.நடராசா - செல்லம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும் இந்திரகுமார் (இலங்கை வங்கி, அச்சுவேலி), சத்திவேல் (விசுவமடு), சுந்தரலிங்கம் (பிரான்ஸ்),உருத்திரகுமார் (பிரான்ஸ்), மகேந்திரன் (புத்தூர் கிழக்கு) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற பரவிப்பாஞ்சான் சோமசுந்தரம் - நாகரத்தினம் தம்பதிகளின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.04.2003) வெள்ளிக்கிழமை மாலை 3.00 மணிக்கு கிளிநொச்சி பரவிப்பாஞ்சான் இல்லத்தில் நடைபெற்று, கிளிநொச்சி பொது மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

*பரவிப்பாஞ்சான், கிளிநொச்சி.*
தகவல்: மனைவி, மகன், சகோதரர், மைத்துனர்.
(C-27354)

### தம்பிராசா நேசராசா (செல்வம்)

மீசாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட தம்பிராசா (சிமோல்) அவர்களின் மகன் நேசராசா (செல்வம்) நேற்று (10.04.2003), வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

*மீசாலை வடக்கு, கொடிகாமம்.*
தகவல்: த.குமார் (சகோதரன்)
(16657)

## இருநாள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மணியளவிலேயே ஆரம்பமானது.

இப்பயிற்சிப்பட்டறையில் விடுதலைப் புலிகளின் அரசியற்றுறைப் பிரமுகர்களுடன் தமிழர் புனர்வாழ்வுக் கழகம், தமிழீழ சுகாதார சேவைகள் பிரிவு மற்றும் தமிழீழ கல்விக் கழகம ஆகியவற்றின் பிரதிநிதிகளும் கலந்துகொள்கின்றனர்.

இலங்கை அரசின் சார்பில் சுகாதாரம், கல்வி, நிதி, தொழிலாளர், நீதி, தொழில் மற்றும் உள்நாட்டு விவகார அமைச்சுகளின் செயலர்கள் பங்குபற்றுகின்றனர்.

சமூக நலன்புரி அமைச்சு வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர், வடக்கு - கிழக்கின் மாவட்ட அரச அதிபர்கள், சமாதான செயலகப் பிரதிநிதிகள் மற்றும் 'சிரான்' அமைப்பைச் சேர்ந்த பிரமுகர்களும் இப்பயிற்சிப்பட்டறையில் கலந்துகொள்கின்றனர்.

அகதிகளுக்கான ஐநா.தூதரகம், ஐ.நா.அபிவிருத்தித் திட்டம், சிறுவர்களுக்கான ஐ.நா.நிதியம், சர்வதேச தொழிலாளர் அமைப்பு, வடக்கு - கிழக்கின் அரச சார்பற்ற அமைப்புகளின் இணையம் ஆகியவை உட்பட பல பொதுநல அமைப்புகளின் பிரதிநிதிகள் இப்பயிற்சிப் பட்டறையில் கலந்துகொண்டுள்ளனர் (ஒ-9-8)

## சர்வதேச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூனி, ஐநா.அபிவிருத்தித்திட்ட இலங்கைப் பிரதிநிதி மிக்கேல் பேமியா ஆகியோர் நேற்று கிளிநொச்சிக்கு வந்தனர்.

விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை, அவர்கள் நேற்று நண்பகல் 12 மணிக்கு சந்தித்துக் கலந்துரையாடினர். இச்சநதிப்பின்போது புலிகளின் பொருளாதார ஆலோசகர் ஜோய் மகேஸ்வரனும் உடனிருந்தார்.

ரோக்கியோவில் நடைபெறும் இலங்கைக்கு உதவிவழங்கும் நாடுகளின் மாநாட்டில் சமர்ப்பிக்கப்படவிருக்கும் வடக்கு - கிழக்கு அபிவிருத்தி மற்றும் புனர்வாழ்வுத் திட்டம் குறித்து நேற்றைய சந்திப்பில் கலந்துரையாடப்பட்டது.

வடக்கு - கிழக்கில் மேற்கொள்ளபபட வேண்டிய அவசர மனிதாபிமான நடவடிக்கைகள் குறித்தும் புலிகள் சர்வதேச வங்கிகளின் பிரதிநிதிகளுக்கு எடுத்துக் கூறினர்.

'சிரான்' இனங்கண்டு இணக்கம் காணப்பட்ட திட்டங்களை விரைவாக நடைமுறைப்படுத்துவது குறித்தும் இச் சந்திப்பில் விரிவாக ஆராயப்பட்டது. (ஓ-3-8-9)

## சுகாதார பணிப்பாளர் பதவி நீக்கம்

யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பதவியில் இருந்து டாக்டர் உமா சிவபாதசுந்தரத்தை வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர் நீக்கியுள்ளார்.இது தொடர்பான கடிதம் யாழ்ப்பாணத்துக்கு நேற்றுக் கிடைத்துள்ளது. இந்தப் பதவிக்கு மலேரியா தடுப்புப் பிரிவுப் பொறுப்பதிகாரி டாக்டர் சிவபாதம் நியமிக்கப்படவிருப்பதாக ஒரு தகவல் தெரிவித்தது. (ஓ-3-139)

## 'ஷியா'...

நஜாப் நகருக்கு மீண்டும் வந்தார்.

இந்நிலையில், நேற்று அவர் தனது சகாக்களுடன் மசூதிக்குள் அமர்ந்து பேசிக் கொண்டிருந்ததாகவும் - அப்போது கத்தி போன்ற ஆயுதங்களுடன் புகுந்த சிலர் அல்கொய்யை வெட்டிக் கொன்றதாகவும் - கூறப்படுகிறது.

ஒவ்வொரு ஈராக்கியர்களும் பங்கேற்கும் புதிய ஈராக்கிய அரசியல் கட்டமைப்பை ஏற்படுத்தவருமாறு லண்டனில் இருந்து கடந்த டிசெம்பர் மாதம் அல்கொய் அழைப்பு விடுத்தமை குறிப்பிடத்தக்கது. (ஓ-12)

## பக்தாத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த நிலையில் குறிப்பிட்ட சோதனைச்சாவடி அருகே சாதாரண உடையணிந்த ஈராக்கியர் ஒருவர் வந்ததாகவும் -தம்மை வரவேற்க வந்தவராகவே கூட்டுப்படையினர் கருதியதாகவும் -

ஆனால், படையினர் அருகே சென்ற அந்த நபர் தனது உடலில் கட்டியிருந்த வெடி குண்டை வெடிக்க வைத்து தற்கொலைத் தாக்குதல் நடத்தியதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவத்தில் கூட்டுப்படையினரில் கணிசமான எண்ணிக்கையானோர் கொல்லப்பட்டதாக மேஜர் பக்கர் ஒப்புக்கொண்ட போதும் எத்தனைபேர் கொல்லப்பட்டனர் என்று தெரிவிக்க மறுத்துவிட்டார்.

பக்தாத்திற்குள் நுழைந்த கூட்டுப்படையினரை ஈராக்கியர்கள் வரவேற்பதை அமெரிக்க சார்பு ஊடகங்கள் பிரசாரப்படுத்திவரும் நிலையில் இத் தற்கொலைத் தாக்குதல் இடம் பெற்றுள்ளது. இதனால் பக்தாத்தில் எதிர்படும் ஈராக்கியர்கள் அனைவரையும் தற்கொலைத் தாக்குதலாளிகளாகவே கருதவேண்டி நேரிட்டுள்ளது. (ஓ)

## இரு தலைவர்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யொன்று நேற்று புத்தளம் சென்ட அன்ட்றூஸ் கல்லூரியில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

இடம்பெயர்ந்த மக்கள் அதிகாலையில் இருந்தே பெரும் எண்ணிக்கையில் கல்லூரியில் கூடியிருந்தனர்.

முஸ்லிம் காங்கிரஸின் வன்னி நாடாளுமன்ற உறுப்பினரும், புனர்வாழ்வு அகதிகள் விவகார மீள்குடியமர்தல் அமைச்சின் இணைப்பு உறுப்பினராகப் பணியாற்றுபவருமான ரிசாத் பதியுதீன், புனர்வாழ்வு அகதிகள் மீள்குடியமர்தல் அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தனவுடன் நடமாடும சேவை நடைபெறவிருந்த பாடசாலைக்கு வந்தார்.

அவர்களுக்குப் பின்னால் வன்னி புனர்வாழ்வுக்கு உதவும் அமைச்சர் நூர்தீன் மஷூரும் வந்துகொண்டிருந்தார்.

இவர்கள் பாடசாலை வாசலருகே வந்ததும் பிரச்சினை எழுந்தது.

அமைச்சர் நூர்தீன் மஷர் உள்ளே நுழையக்கூடாது என்று ரிசாத் பதியுதீனின் ஆதரவாளர்கள் ஆட்சேபம் தெரிவித்தனர். கோஷங்களை எழுப்பி எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

அப்போது அமைச்சர் நூர்தீன் மஷூரின் ஆதரவாளர்கள் "அமைச்சரைத் தடுக்க முடியாது. அவரும் உள்ளே செல்ல வேண்டும்" என்று ஆக்ரோஷமாகக் கோஷங்களை எழுப்பினர்.

இவற்றால் இரு தரப்பினருக்குமிடையே முறுகல் நிலை ஏற்பட்டது. அது முற்றி மோதலாக வெடித்தது.

அமைதியை ஏற்படுத்துவதற்கு பொலீஸார் பெரு முயற்சி செய்தனர். அது பலிக்காது போகவே கூட்டத்தைக் கலைப்பதற்காக வான் நோக்கித் துப் பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

அப்போது பலரும் சிதறி ஓடினர். அவர்களுக்கு இடையில் அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தன அகப்பட்டு நிலத்தில் வீழ்ந்தார். அவருக்கு உசல் காயம் ஏற்பட்டது.

வான் நோக்கித் துப்பாக்கிச் சூடுகள் ஓய்ந்ததும் முன்னர் ஓடியவர்களில் பலர் திரும்பி வந்து விட்டனர்.

பொலீஸார் கண்ணீர்ப்புகைப் பிரயோகம் செய்தனர்.

இராணுவத்தினரும் உதவிக்கு அழைக்கப்பட்டனர்.

நடமாடும் சேவை ரத்துச் செய்யப்பட்டது. மற்றொரு நாளில் சேவை நடத்தப்படும் என்றும் அதற்குரிய அறிவித்தல் விரைவில் வரும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

கூட்டம் கலைந்த பின்னரும் புத்தளம் நகரில் நீண்ட நேரம் பதற்றம் நிலவியது. (ஓ-3-12)

## ஜீ.சீ.ஈ. சாதாரணதர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

7 ஏ, பி, சி - இருவர்,

சென்.ஜோன்ஸ் கல்லூரி

10 ஏ - மூவர் (தயாபரன் தீனதயாள், தர்மரத்தினம் வேணுகானன், கோபாலசிங்கம் கார்த்திகன்),

9 ஏ, பி - ஐவர். 9 ஏ, சி - ஒருவர், 9 ஏ, எஸ் - இருவர், 8 ஏ, 2 பி - ஒருவர், 8 ஏ, பி, சி - மூவர், 8 ஏ, பி, எஸ் - இருவர், 8 ஏ, சி, எஸ் - ஒருவர்.

திருக்குடும்ப கன்னியர்மடம்

8 ஏ, 2 பி - இருவர், 7 ஏ, 2 பி, சி - ஒருவர், 6 ஏ, 3 பி, சி - ஒருவர், 5 ஏ, 3 பி, 2சி - இருவர்.

யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி

10 ஏ - ஒருவர் (கனிமொழி ஆனந்தராசா),

9 ஏ, பி - அறுவர், 8 ஏ, 2 பி, - அறுவர், 8 ஏ. பி, சி - எண்மர், 8 ஏ, 2 சி - இருவர், 8 ஏ, பி, எஸ் - மூவர், 8 ஏ, சி, எஸ் - ஒருவர்.

யாழ். சுண்டுக்குழி மகளிர் கல்லூரி

10 ஏ - ஒருவர் (வித்தியா ரட்ணசாமி)

9 ஏ, பி - இருவர், 9 ஏ, சி - இருவர். 9 ஏ, சி, எஸ் - இருவர், 8 ஏ, 2பி, ஒருவர் -8ஏ, பி, சி - இருவர், 8 ஏ, 2 சி - ஒருவர், 8 ஏ, பி - ஒருவர்.

பெரியபுலம் ம.வி.

10 ஏ - ஒருவர் (பேரம்பலம் மாலினி).

யாழ்.மத்திய கல்லூரி

7 ஏ, 3 பி - ஒருவர், 8 ஏ, 2 பி - ஒருவர், 6 ஏ, 3பி, சி - ஒருவர். 5 ஏ, 5 பி - ஒருவர்.

சென்.பற்றிக்ஸ் கல்லூரி

7 ஏ, 2 பி, எஸ் - ஒருவர், 7 ஏ, பி, சி, எஸ் - ஒருவர், 6 ஏ, பி, 2 சி, எஸ் - ஒருவர், 6 ஏ, பி, சி. 2 எஸ் - ஒருவர். (ஓ-3-5)

## 1000 தொண்டர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டனர்.

கூட்டமைப்பு எம்.பிக்களான இரா சம்பந்தன், ஜோசப் பரராஜசிங்கம், மாவை சேனாதிராசா, செல்வம் அடைக்கலநாதன், என். ரவிராஜ், ஜி.ஜி.கஜேந்திரகுமார், அ.சந்திரநேரு, கே.துரைரெட்ணசிங்கம் ஆகியோர் இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

தொண்டர் ஆசிரியர் நியமனம் வழங்க முன்னர் சட்டமா அதிபரின் ஒப்புதலைப் பெறுவதற்கு உரிய கோவைகளை சட்டமா அதிபருக்கு உடன் அனுப்பிவைக்கும்படி கல்வி அமைச்சருக்கு பிரதமர் பணிப்புரை வழங்கியதாகவும் -

சட்டமா அதிபரின் ஒப்புதல் கிடைத்ததும் நியமனங்களை வழங்க கல்வி அமைச்சருக்கு பிரதமர் அதிகாரம் வழங்கியுள்ளதாகவும் -

இரா. சம்பந்தன் மேலும் சொன்னார். (ஓ-3)


அனைத்து மாணவர்களுக்கான விசேட கருத்தரங்கு
LOGIC
அச்சுவேலி மத்திய கல்லூரி
காலம்: 12.04.2003 9.00 a.m.
பிறைற்றின் கல்வி நிலையம்
சங்கத்தானை - தென்மராட்சி
காலம்: 13.04.2003 9.00 a.m.
By. P.கமல
S.R.J.கதன்
Note:விளக்கொகுப்புக்கள் வழங்கப்படும்.
(16650)

CHEMISTRY CENTRE
83, பலாலி வீதி, கந்தர்மடம்.
A/L 2005
புதிய பிரிவு
★ எமது வழமையான முன்னணி ஆசிரியர்களின்
ஒருங்கிணைந்த சேவையுடன் ★
அனுமதிக்காக பெற்றோர்
நேரில் வருவது விரும்பத்தக்கது
அனுமதி நேரம்
11.4.03 Fri. 3 - 4 p.m.
★ நேர அட்டவணை நிறுவனத்தில் பெறலாம்.
(37068)

RAMCO CEMENT
ராம்கோ சிமெந்து
இந்தியாவில் இருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட ராம்கோ சிமெந்து இன்று (11.04.2003) வெள்ளிக்கிழமை பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடையவுள்ளது.
தேவையானோர் முன்கூட்டியே பதிவுசெய்துகொள்ளவும்.
தொடர்புகளுக்கு:
ஈஸ்வரபகவான் அன் கம்பனி
91, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.T.P. : 021-2222350
(C/27353)

விக்ஸா கல்வி நிறுவனம்
A/L 2005 கலை, வர்த்தக வகுப்புகள்
ஆரம்பம் 12.04.2003 (8 மணி)
எமது வழமையான ஆசிரியர் குழாம்
Acc. திரு. பாலவாசன்
Eco. திரு. விக்கி
திரு. நந்தீஸ்
Com. திரு. யசோ
Log. திரு. சயந்தன்
Tam. திரு. குழந்தை பகுதி I
திரு. லிங்கம் பகுதி II
H/C. திரு. பத்மராஜா
Geo. திரு. பாபு
Hin. திரு. N.T.தரன்
Hist. திரு. சுதன்
Gover. திரு. ஸ்ரீரங்கநாத்
Chri. திரு. வசந்தன்
Dram. திரு. மதி
★ அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக்கொள்ளவும்.
(C/27265)

BITSMANS
கல்வி நிறுவனம், மானிப்பாய்.
A/L 2004 இரசாயனம்
PAPER CLASS
(அலகு ரீதியாக 1979 - 2003)
திரு. N.மகேஸ்வரன்
B.Sc. (Hons)
ஆரம்பம் 12.04.2003 சனி 4.30
(C/27267)

CHEMISTRY CENTRE
83, பலாலி வீதி, கந்தர்மடம்.
A/L 2004
முக்கிய அலகுகள்
ஒரேகாலப் பகுதியில் ஆரம்பம்
INORGANIC
Wed. 7-8 a.m., Fri. 4-5 p.m.
ORGANIC
Mon., Fri. 5-6 p.m.
paper I
mon.,Fri. 6-7p.m.
யாவும் ஆரம்பம்
11.4 Fri 4 p.m.
By.அன்புமுகன்
(37068)

NEW SCIENCE CENTRE
யாழ்நகர்
A/L 2005 புதிய பிரிவு
Che. :- அன்புமுகன் அன்பு
Phy. :- கருணாநிதி, சிவலிங்கம்
Bio. :- நாகநாதன், தற்பரன்
C.Maths:- குணசிங்கம், பிரதீபன், தவசேகர்
ஆரம்பம்:- 12-04-2003
சனி, நேரம் 7.00 a.m.
(16806)

SUBRA (14)
சித்தன்கேணி
O/L Day Class
ஆரம்பம்:
14.04.2003
திங்கள் காலை 10.00
(C/27271)

விற்பனைக்கு
குறோட்டன், செவ்வரத்தை, றெசினா, குயின்பாம், பான்பாம், கேன்பாம், சைப்பிரஸ், முசந்தாஸ், போகன்விலா, ஈரப்பலா ஆகிய கன்றுகள் விற்பனைக்குண்டு.
கிறீன் பாக்
152/2, கோவில் வீதி, யாழ்ப்பாணம்.
(I.C.R.C.இற்கு அண்மையில்)
(16579)

மலிவு விற்பனை
புதியரக சூட்டிங்குகள்
~~450/-~~ - 350/-
~~350/-~~ - 250/-
CITY TAILORS
73, பெரியகடை வீதி, யாழ்.
(16581)

ஸ்ரார் கல்வி நிலையம்
சுன்னாகம்
A/L 2005
கலை. வர்த்தக வகுப்புகள்
ஆரம்பம்.
காலம்: 12.04.2003 (6.30 a.m.)
- நிர்வாகி.
(16417)

தரம் I முதல் O/L வரை
2 ஆம் தவணைக்கான
புதிய வகுப்புகள் ஆரம்பம்:
11.04.2003 (இன்று)
புதிய அனுமதிகள் வழங்கப்படும்.
நாவலர்
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
(16667)

A/L 2005
(கலைப் பிரிவு)
ஆரம்பம்:12.04.2003 சனி
மாலை 4.30 (பு.நே.)
(யாழ்நகரின் தரமான முன்னணி ஆசிரியர்கள்)
N.E.I. - நல்லூர்.
(C/27331)

LIONAIR
LANKA'S PRIDE IN THE SKY
யாழ்ப்பாணம் - கொழும்பு - யாழ்ப்பாணம்
பாதுகாப்பான - சௌகரியமான பயணம்
★ பலாலி விமான நிலையத்திலிருந்து யாழ்.நகருக்கும் யாழ்.நகரிலிருந்து பலாலி விமான நிலையத்திற்கும் இலவச போக்குவரத்துச் சேவை.
★ இரத்மலானை விமான நிலையத்திலிருந்து பம்பலப்பிட்டி சந்திக்கும் பம்பலப்பிட்டி சந்தியிலிருந்து இரத்மலானை விமான நிலையத்துக்கும் இலவச போக்குவரத்துச் சேவை.
பதிவுகளுக்கு :
லயன்எயர் ரிக்கெற் அலுவலகம்
யாழ்ப்பாணம்
# 1-T, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 0777-733992
(C/27281)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன்' (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 11.04.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.